வணக்கம் நண்பர்களே...

இந்தப்பகுதி முழுக்க முழுக்க தமிழ் - உரைநடைப் பகுதிக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டது.

இது முற்றிலும் சமச்சீர் புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்ட கேள்விகள் அடங்கிய தொகுப்பாகும். ஒரு சில வினாக்கள் மட்டும் புத்தகத்தை தாண்டி வெளியில் இருந்து எடுக்கப்பட்டவை.

ஏழாவது தமிழ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள உரைநடை மற்றும் துணைப்பாடப் பகுதிகள்:

1) செம்மொழித் தமிழ்
2) ஊரும் பேரும்
3) மகாவித்வான் மீனாட்சிசுந்தரனார்
4) கோவூர்கிழார்
5) கணிதமேதை இராமானுஜம்
6) நன்றிப்பரிசு
7) காந்தியடிகள் கடிதம்
8) உரியது
9) தூங்கா நகர்
10) அறிவு நுட்பம்
11) நெசவு
12) நிலைத்த செல்வம் கல்வி செல்வம்
13) இயற்கை வேளாண்மை
14) தூரத்து ஒளி
15) தமிழக விளையாட்டுகள்
16) நண்பன்
17) ஓவியக்கலை
18) கொடைக்குணம்

அனைவரும் அனைத்து வினாக்களுக்கும் பதில் அளித்து பழகி வெற்றிப்பெற என் வாழ்த்துக்கள்

இப்படிக்கு

மீண்டும் உங்கள் ஆதரவுடன்

கோ.பழனி முருகன்

## ஏழாவது வகுப்பு தமிழ் - உரைநடை

### 1) செம்மொழித் தமிழ்

1) 'எளிதில் பேசவும், எளிதில் பாடல் இயற்றவும் இயற்கையாக அமைந்தது தென்மொழியாகிய தமிழ் ஒன்றே' - என்று கூறியவர் யார்?

A] தேவநேயப்பாவணர்

B] மறைமலையடிகள்

C] வள்ளலார்

D] பரிதிமாற்கலைஞர்

2) உலக மொழிகளில் சிறந்தது கீழ்க்கண்ட எந்த மொழி என்று அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்?

A] தமிழ் மொழி

B] ஆங்கில மொழி

C] வங்க மொழி

D] பிரெஞ்சு மொழி

3) திருந்திய செவ்வியல்புகள் பொருந்திய மொழிகள்__________எனப்படும்?

A] தனிமொழி

B] உயர்மொழி

C] தமிழ்மொழி

D] செம்மொழி

4) கிரேக்கம், இலத்தீன், சமஸ்கிருதம், சீனம், எபிரேயம், அரபு, ஈப்ரு ஆகிய மொழிகள் செம்மொழிகள் என பட்டியலிட்டவர் யார்?

A] டாக்டர்.கிரௌல்

B] முனைவர் எமினோ

C] ச.அகத்தியலிங்கம்

D] கால்டுவெல்

5) தற்போது பேச்சு வழக்கில் இல்லாத மொழிகள் என கூறப்பட்ட மொழிகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] கிரேக்கம்

B] ஈப்ரு

C] இலத்தீன்

D] சமஸ்கிருதம்

6) செவ்வியல் இலக்கியங்கள் என கூறப்படும் நூல்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] முத்தொள்ளாயிரம்

B] பதினெண்கீழ்க்கணக்கு

C] தொல்காப்பியம்

D] சீவகசிந்தாமணி

7) 'தமிழ்மொழி அழகான சித்திர வேலைப் பாடமைந்த வெள்ளித்தட்டு; திருக்குறள் அதில் வைக்கப்பட்டுள்ள தங்க ஆப்பிள்' - என்று தமிழ் மொழியை சிறப்பித்துக் கூறியவர் யார்?

A] கால்டுவெல்

B] டாக்டர் கிரௌல்

C] முனைவர் எமினோ

D] வீரமாமுனிவர்

8) 'தமிழ் என்னை ஈர்த்தது; குறளோ என்னை இழுத்தது' - என்று தமிம் மொழியின் சிறப்பை மொழிந்து கூறியவர் யார்?

A] டாக்டர் கிரௌல்

B] முனைவர் முஸ்தபா

C] ஜி.யூ.போப்

D] எல்லீஸ் துரை

9) குமரிக்கண்டமானது கீழ்க்கண்ட எவற்றின் மிகப்பழமையான நிலப்பகுதி என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] வணிகர்கள்

B] கடல்கள்

C] தமிழர்கள்

D] உலகம்

10) 'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி' - என்ற வரிப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] முத்தொள்ளாயிரம்

B] மாறனலங்காரம்

C] தண்டியலங்காரம்

D] தொல்காப்பியம்

11) பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்னும் சொற்களானது எந்த நாட்டுச் தமிழ்ச் சொற்கள் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

A] நாஞ்சில் நாடு

B] தென்மொழி நாடு

C] கொங்கு நாடு

D] வருச நாடு

12) 'தமிழ் பிறமொழித் துணையின்றித் தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்' - என்று கூறியவர் யார்?

A] மறைமலையடிகள்

B] ஜி.யூ.போப்

C] கால்டுவெல்

D] பரிதிமாற்கலைஞர்

13) மக்களுக்கு ஒழுக்க வரம்பு தேவையானது போலவே மொழிக்கு எந்த வரம்பு இன்றியமையாது என ஆசிரியர் கூறுகிறார்?

A] இலக்கிய வரம்பு

B] இலக்கண வரம்பு

C] செய்யுள் வரம்பு

D] மொழிநடை வரம்பு

14) கீழ்க்கண்ட எந்த சங்கத்தில் இருந்தே இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து முத்தமிழ் என விளங்கி வரலாயிற்று என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] தமிழ்ச்சங்கம்

B] கடைச்சங்கம்

C] இடைச்சங்கம்

D] முதற்சங்கம்

15) ‘எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே’ - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] திருக்குறள்

B] சிலப்பதிகாரம்

C] தொல்காப்பியம்

D] தண்டியலங்காரம்

16) கீழ்க்கண்டவற்றில் ஒருமை, பன்மை என்னும் இருவகை எண் மட்டும் காணப்படும் மொழி எது?

A] தமிழ்மொழி

B] வடமொழி

C] இலத்தீன் மொழி

D] பிரெஞ்சு மொழி

17) கீழ்க்கண்டவற்றில் ஒருமை, பன்மை, இருமை என மூவகை எண்கள் உள்ள மொழி எது?

A] சமஸ்கிருத மொழி

B] வடமொழி

C] தமிழ் மொழி

D] பிரெஞ்சு மொழி

18) எழுத்துக்கும், சொல்லுக்கும் இலக்கணம் கூறி அவற்றுடன் கூடி வாழ்வியலுக்கான பொருளிலக்கணத்தையும் கூறும் நூல் எது?

A] பிரெஞ்சு மொழி

B] ஆங்கில மொழி

C] தமிழ் மொழி

D] இலத்தீன் மொழி

19) பண்டைய தமிழ் இலக்கியங்களும் இலக்கணகங்களும் கீழ்க்கண்ட எந்த வடிவில் இருந்ததாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்?

A] செய்யுள் வடிவில்

B] உரைநடை வடிவில்

C] கவிதை வடிவில்

D] அணி வடிவில்

20) கீழ்க்கண்டவற்றில் வேறு எந்த மொழிகளிலும் காணப்படாத செய்யுள்வகை எது?

A] வெண்பா

B] ஆசிரியப்பா

C] வஞ்சிப்பா

D] கலிப்பா

21) புலவர்கள் செய்யுளுக்குச் சிறப்புச் சேர்க்க கீழ்க்கண்ட எந்த இரு அணிகளைப் பயன்படுத்தி பாடல்களை இயற்றியுள்ளார்கள்?

A] விரியுவமை, தொகையுவமை

B] உவமை, உருவகம்

C] திரிபணி, ஐயவணி

D] மயக்கவணி, ஒழிப்பணி

22) தமிழ் மொழியில் கீழ்க்கண்ட எவற்றிக்கு மட்டுமே பால்வேறுபாடு உண்டு என்று கூறப்படுகிறது?

A] இனம்

B] மொழி

C] உயிர்கள்

D] பொருள்

விடைகள் - செம்மொழித் தமிழ்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 6 | D | 11 | A | 16 | A | 21 | B |
| 2 | A | 7 | B | 12 | C | 17 | B | 22 | C |
| 3 | D | 8 | A | 13 | B | 18 | C | | |
| 4 | C | 9 | D | 14 | D | 19 | A | | |
| 5 | B | 10 | C | 15 | C | 20 | D | | |

## 2) ஊரும் பேரும்

1) இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழ் மக்கள், தம் குடியிருப்புப் பகுதிகளை கீழ்க்கண்ட எந்த பெயரால் குறித்தனர்?

A] நாடு

B] நகரம்

C] ஊர்

D] பட்டினம்

2) கீழ்க்கண்ட எந்த நாட்டின் அருகே ஊர் என்னும் பெயரில் ஒரு நகரமும், ஊர்நம்மு என்னும் ஊரும் உள்ளதாக கூறப்படுகிறது?

A] பாபிலோன்

B] ஏதேன்ஸ்

C] எத்திலோப்பியா

D] ஈரான்

3) கீழ்க்கண்டவற்றில் குறிஞ்சி நில மக்களை பற்றி கூறியவற்றில் தவறானது எது?

1] மலையின் அருகே உள்ள ஊர்களில் மலையை சார்ந்த பெயர்களையே வைத்து அந்த ஊரை அழைத்தனர்

2] குன்றை அடுத்துள்ள ஊர்களில் குன்றை சார்ந்த பெயர்களை ஊர்பெயர்களாக வைத்து அழைத்தனர்

3] மலையை குறிக்கும் வடசொல்லான கிரி என்ற சொல்லை தன் ஊர்பெயரில் இணைத்து அழைத்து வாழ்ந்தனர்

4] குறிஞ்சி மலை மக்கள் மலையிலிருந்து பிற இடங்களுக்கு சென்று தங்கிய போது அங்குள்ள நிலப்பெயரையே பெயர் வைத்துக் கொண்டு வாழ்ந்தனர்

A] 1 மட்டும் தவறு

B] 1 மற்றும் 3 தவறு

C] 2 மற்றும் 3 தவறு

D] 4 மட்டும் தவறு

4) அத்தி மரங்கள் சூழ்ந்த ஊரானது கீழ்க்கண்ட எந்த பெயரால் அழைக்கப்பட்டது?

A] அத்தியூர்

B] ஆர்க்காடு

C] ஆலங்காடு

D] அத்திக்காடு

5) காளிப்பட்டி, சிறுகூடல்பட்டி, ஆட்டையாம்பட்டி ஆகிய ஊர்களானது கீழ்க்கண்ட எந்த நிலத்தை சார்ந்த ஊர்களை குறிக்கின்றன?

A] முல்லை நில ஊர்கள்

B] குறிஞ்சி நில ஊர்கள்

C] மருதநில ஊர்கள்

D] நெய்தல் நில ஊர்கள்

6) நிலவளமும், நீர்வளமும் பயிர்வளமும் செறிந்த பகுதியானது____பகுதி என அழைக்கப்படுகிறது?

A] முல்லை நில ஊர்கள்

B] நெய்தல் நில ஊர்கள்

C] குறிஞ்சி நில ஊர்கள்

D] மருதம் நில ஊர்கள்

7) கீழ்க்கண்ட எந்த நிலத்தைச் சார்ந்த ஊர்களில் பொங்கி பெருகி வழிந்தோடி வளங்கூடிய ஆறும், அதன் கரையில் இருந்த உயர்ந்த மரங்களும் ஊர்ப்பெயர்களில் கலந்து நிலைத்தன?

A] குறிஞ்சி நில ஊர்கள்

B] மருத நில ஊர்கள்

C] முல்லை நில ஊர்கள்

D] நெய்தல் நில ஊர்கள்

8) புளியமரங்கள் அடர்ந்த பகுதியில் அழைக்கப்பட்ட மரப்பெயர்த் தொகுப்பு பெயர்களில் கீழ்க்கண்வற்றில் தவறானது எது?

A] புளியனூர்

B] புளியஞ்சோலை

C] புளியம்பட்டி

D] புளியங்குடி

9) சீவலப்பேரி, மாங்குளம், வேப்பேரி ஆகிய ஊர்கள் கீழ்க்கண்ட எந்த நிலத்தை சார்ந்த ஊர்கள் ஆகும்?

A] குறிஞ்சி

B] முல்லை

C] மருதம்

D] நெய்தல்

10) பழங்காலத்தில் கடற்கரையில் உருவான பேரூர்கள்_____என அழைக்கப்பட்டன?

A] பாக்கம்

B] கோட்டை

C] குப்பம்

D] பட்டினம்

11) பழங்காலத்தில் கடற்கரையில் உருவான சிற்றூர்களானது_____என அழைக்கப்பட்டன?

A] பாக்கம்

B] பட்டினம்

C] குப்பம்

D] சேரி

12) நெடிய கடற்கரையை உடைய தமிழகத்தின் பகுதியில் கீழ்க்கண்ட யார் வாழ்ந்த ஊர்கள் இருந்ததாக கூறப்படுகிறது?

A] வேட்டுவர்

B] அந்தணர்

C] பரதவர்

D] இருளர்

13) வடக்கே அமைந்த ஊர்ப்பகுதியை முற்காலத்தில் எவ்வாறு அழைத்தனர்?

A] வடுவூர்

B] வடபழஞ்சி

C] வடவூர்

D] வடபஞ்சி

14) நாயக்க மன்னர்கள் தமிழகத்தை எத்தனை பாளையங்களாகப் பிரித்து தம் ஆளுகைக்குட்படுத்தினார்கள்?

A] 72

B] 71

C] 73

D] 75

15) கல்வெட்டுகளில் காணப்படும் மதிரையானது கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக திரிந்து மதுரை என மாறியுள்ளது?

A] மதரை

B] மிதிரை

C] மருதை

D] மிருதை

16) பொருத்துக

1) ஆத்தூர் - முல்லை நில ஊர்;
2) கீழ்க்கரை - மருத நில ஊர்
3) சின்னகொல்லப்பட்டி - நெய்தல் நில ஊர்; 4) மேட்டுப்பாளையம் - நாயக்க மன்னர்கள்

A] 4 1 3 2

B] 3 4 2 1

C] 1 2 4 3

D] 2 3 1 4

17) இந்திய விடுதலைக்குத் தென்னகத்திலிருந்து அந்நியரை எதிர்த்த சிறந்த

வீரான புலித்தேவன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த வயதிலேயே மற்போர், சிலம்பம், வாள்வீச்சு என வீரக்கலைகள் எல்லாம் கற்றுத் தேர்ந்திருந்தான்?

A] பதினொன்று

B] பன்னிரண்டு

C] பதினைந்து

D] பதினான்கு

18) ஆடு, மாடுகள் அடைக்கப்படும் இடமானது எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A] குடிசை

B] தொழுவம்

C] பட்டி

D] கொல்லை

விடைகள் - ஊரும் பேரும்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 5 | A | 9 | C | 13 | B | 17 | B |
| 2 | A | 6 | D | 10 | D | 14 | A | 18 | C |
| 3 | D | 7 | B | 11 | A | 15 | C | | |
| 4 | B | 8 | A | 12 | C | 16 | D | | |

## 3) மகாவித்வான் மீனாட்சிசுந்தரனார்

1) 'யார் காப்பார் என்று தமிழன்னை ஏங்கிய போது நான் காப்பேன்' - என்று எழுந்தவர் யார்?

A] மீனாட்சி சுந்தரனார்

B] உ.வே.சாமிநாதர்

C] ஆறுமுக நாவலர்

D] இராமலிங்கனார்

2) கீழ்க்கண்டவற்றில் யார் 'தமிழ்த்தாத்தா' - என்று அழைக்கப்பட்டார்?

A] உ.வே.சாமிநாதர்

B] சாமிநாதப்பிள்ளை

C] மீனாட்சி சுந்தரனார்

D] பரிதிமாற்கலைஞர்

3) உ.வே.சா அவர்களின் ஆசிரியர் பெயர் யாது?

A] குன்றக்குடி அடிகள்

B] காஞ்சி மகாவித்வான் சபாபதி முதலியார்

C] மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை

D] மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார்

4) மீனாட்சி சுந்தரனார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது பிறந்தார்?

A] 1818

B] 1816

C] 1815

D] 1817

5) மீனாட்சி சுந்தரனார் அவர்கள் பிறந்த ஊர் யாது?

A] எண்ணெய்கிராமம்

B] வளையப்பட்டி

C] திரிசரபுரம்

D] கோவில்பட்டி

6) மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்கு கீழ்க்கண்டவற்றுள்____என்ற வேட்கை தணியாததாக இருந்தது?

A] சொற்பொழி

B] சொல்லி கொடுக்கும் தன்மை

C] கற்கவேண்டும்

D] பொருள் ஈட்ட வேண்டும்

7) மீனாட்சி சுந்தரனார் அவர்களிடம் படித்த குறிப்பிட்ட மாணவர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான மாணவர் யார்?

A] சவரிராயலு

B] தியாகராசர்

C] குலாம்காதர் நாவலர்

D] பாஸ்கர சேதுபதி

8) கீழ்க்கண்ட எந்த ஊரில் ஆதின வித்வானாக மீனாட்சி சுந்தரனார் அவர்கள் சிலகாலம் பணியாற்றி இருந்தார்?

A] திருமங்கலம்

B] திருவாரூர்

C] திருவாவடுதுறை

D] திருப்பெருந்துறை

9) எந்த ஊரில் மீனாட்சி சுந்தரனார் அவர்கள் ஆதின வித்வானாக வாழ்ந்து இருந்த காலத்தில் உ.வே.சாமிநாதருக்கு ஆசிரியராக இருந்தார்?

A] திருவாவடுதுறை

B] கரந்தை தமிழ்ச்சங்கம்

C] மதுரை ஆதினம்

D] திருப்பெருந்துறை

10) மீனாட்சி சுந்தரனார் அவர்கள் தம்வாழ்வின் பெரும்பகுதியை____செலவழித்தார்?

A] அலுவலக பணியிலேயே

B] விளையாட்டிலேயே

C] படிப்பதிலேயே

D] கற்பிப்பதிலேயே

11) மகாவித்வா மீனாட்சி சுந்தரனார் அவர்கள் கீழ்க்கண்ட எத்தனைக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியுள்ளார்?

A] 75

B] 80

C] 70

D] 85

12) மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார் அவர்கள் கோவில்களை பற்றி இயற்றிய தலபுராண நூல்களில் கீழ்க்கண்டவற்றில் எது இடம்பெறவில்லை?

A] கோவிலின் வரலாறு

B] கோவிலின் சிறப்புகள்

C] பூஜை செய்யும் முறைகள்

D] இறைவனின் பெருமைகள்

13) கீழ்க்கண்ட எந்த நண்பர் குடும்பம் தொடர்பாக மீனாட்சி சுந்தரனார் அவர்கள் கும்பகோணத்திற்கு பத்திரத்தில் சாட்சி கையொப்பமிட சென்றார்?

A] ஆறுமுகம்

B] சண்முகம்

C] கந்தசாமி

D] துரைமுருகன்

14) 'மூன்றாவது தெரு' - என்ற வரியில் மூன்றாவது என்னும் சொல்லானது கீழ்க்கண்ட எந்த பொருளைக் குறிக்கிறது?

A] வெற்றிலை

B] பாக்கு

C] புகையிலை

D] சுண்ணாம்பு

15) 'நோய்க்கு மருந்து இலக்கியம்' - என்று கூறியவர் யார்?

A] உ.வே.சாமிநாதர்

B] மீனாட்சி சுந்தரனார்

C] கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

D] இராமலிங்க அடிகள்

16) மீனாட்சி சுந்தரனார் இறந்த ஆண்டு எது?

A] 1875

B] 1874

C] 1876

D] 1872

17) மீனாட்சி சுந்தரனார் அவர்கள்_____பாடுவதில் வல்லவர்?

A] விருத்தப்பா

B] அந்தாதி

C] கலம்பகம்

D] தலபுராணம்

18) 'நாளை என் தாய்மொழி சாகுமானால் இன்றே நான் இறந்து விடுவேன்' - என கூறிய கவிஞர் யார்?

A] வில்லியம் ஷேக்ஸ்பியர்

B] பாரதிதாசன்

C] இரசூல் கம்சதேவ்

D] கோல்ட்ரிட்ஜ்

19) ‘சொல்ல துடிக்குது மனசு’ - என்ற நூலை எழுதியவர் யார்?

A] வி.கே.டி.பாலன்

B] ந.பழநியப்பன்

C] விந்தன்

D] பாஸ்கரன்

20) ‘அறம் பெருகும் தமிழ் படித்தால், அகத்தில் ஒளி பெருகும்’ - என்ற பாடலை பாடிய கவிஞர் யார்?

A] மறைமலையடிகள்

B] பெருஞ்சித்திரனார்

C] தேவநேயப்பாவாணர்

D] மீனாட்சி சுந்தரனார்

21) ‘அறம் பெருகும் தமிழ் படித்தால் அகத்தில் ஒளி பெருகும்’ - என்ற பாடலை பெருஞ்சித்திரனார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நூலில் பாடியுள்ளார்?

A] இளமை விடியல்

B] நூறாசிரியம்

C] கொய்யாக்கனி

D] பள்ளிப் பறவைகள்

22) ‘தொப்புள் கொடி உறவுகள் அறந்து போகாமல் காப்பது தாய்மொழி மாத்திரமே’ - என்று கூறிய ஆசிரியர் யார்?

A] மு.வரதராசனார்

B] விந்தன்

C] வி.கே.டி.பாலன்

D] திரு.வி.க

23) இரசூல் கம்சதேவ் - என்பவர் கீழ்க்கண்ட எந்த நாட்டை சேர்ந்த கவிஞர் ஆவார்?

A] இரஷ்யக் கவிஞர்

B] ஆங்கிலக் கவிஞர்

C] பிரெஞ்சு கவிஞர்

D] உருது கவிஞர்

விடைகள் - மகாவித்வான் மீனாட்சிசுந்தரனார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 6 | C | 11 | B | 16 | C | 21 | D |
| 2 | A | 7 | D | 12 | C | 17 | D | 22 | C |
| 3 | D | 8 | C | 13 | A | 18 | C | 23 | A |
| 4 | C | 9 | A | 14 | D | 19 | A | | |
| 5 | A | 10 | D | 15 | B | 20 | B | | |

## 4) கோவூர்கிழார்

1) கோவூர்கிழார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த தலைநகர் அருகிலுள்ள கோவூரில் பிறந்தார்?

A] புகார்

B] பூம்புகார்

C] உறையூர்

D] மதுரை

2) கோவூகிழார் அவர்கள் கீழ்க்கண்ட எந்த மரபில் பிறந்தவராவார்?

A] அந்தணர்

B] சத்திரியர்

C] சாணக்கியர்

D] வேளாளர்

3) கீழ்க்கண்ட எந்த நூலில் மட்டும் கோவூர்கிழாரின் பாடல்கள் இடம் பெறவில்லை?

A] அகநானூறு

B] நற்றிணை

C] குறுந்தொகை

D] திருவள்ளுவமாலை

4) நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு, திருவள்ளுவமாலை ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள கோவூர்கிழாரின் பாடல்கள் மொத்தம் எத்தனை?

A] 15 பாடல்கள்

B] 18 பாடல்கள்

C] 16 பாடல்கள்

D] 17 பாடல்கள்

5) கோவூர்கிழார் அவர்களை அழைத்து அரசு அவைக்களத் தலைவராக்கிய சோழ மன்னர் யார்?

A] இராஜராஜ சோழன்

B] கரிகாலன்

C] நெடுங்கிள்ளி

D] நலங்கிள்ளி

6) நலங்கிள்ளி என்ற மன்னன் கீழ்க்கண்ட எந்த நகரை தலைநகரமாக கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான்?

A] உறையூர்

B] புகார்

C] காவேரி பூம்பட்டினம்

D] பூம்புகார்

7) 'இவர் அஞ்சா நெஞ்சர்; யார் தவறு செய்தாலும் அத்தவற்றினைச் சுட்டிக்காட்டி, முறையாக ஏற்றுக்கொள்ளும் வகையில் இனிமையாக சொல்லித் திருந்துவதில் வல்லவர்' - இக்கூற்றில் சுட்டிக் காட்டப்படுபவர் யார்?

A] மோசிகீரனார்

B] கோவூர்கிழார்

C] இளந்தத்தனார்

D] நலங்கிள்ளி

8) சோழர் மரபில் தோன்றிய நலங்கிள்ளிக்கும் கீழ்க்கண்ட யாருக்கும் நெடுங்காலம் பகைமை இருந்து வந்ததாக கூறப்படுகிறது?

A] மாறவர்மன்

B] அப்ராஜித்தன்

C] நெடுங்கிள்ளி

D] கிள்ளிவளவன்

9) நலங்கிள்ளியின் படையினர் உறையூர்க்கு அருகில் உள்ள எந்தக் கோட்டையை முற்றுகையிட்டனர்?

A] ஆவூர்க்கோட்டை

B] கோவூர்கோட்டை

C] ஊமைக்கோட்டை

D] மலைக்கோட்டை

10) பொருத்துக

1) பனம்பூ - சோழன்; 2) வேப்பம்பூ - சேரன்; 3) ஆத்திப்பூ - பாண்டியன்;

A] 2 1 3

B] 3 1 2

C] 1 2 3

D] 2 3 1

11) கோவூர்கிழாரின் அறிவுரையைக் கேட்டு உறையூர்கோட்டையை நலங்கிள்ளியிடம் ஒப்படைத்து விட்டு வெளியேறிய சோழ மன்னன் யார்?

A] கிள்ளிவளவன்

B] திருமுடிக்காரி

C] நெடுங்கிள்ளி

D] நலங்கிள்ளி

12) குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்ற மன்னன் கீழ்க்கண்ட எந்த நகரைத் தலைநகராகக் கொண்டு சோழநாட்டை ஆண்டு வந்தான்?

A] உறையூர்

B] புகார்

C] ஆவூர்கோட்டை

D] காவேரிபூம்பட்டினம்

13) கீழ்க்கண்ட சோழ மன்னர்களில் சிறந்த கவிஞர் என்று பெயர் பெற்றவர் யார்?

A] கிள்ளிவளவன்

B] திருமுடிக்காரி

C] நெடுங்கிள்ளி

D] நலங்கிள்ளி

14) கீழ்க்கண்டவற்றில் எந்த மன்னன் புலவர்களுக்கு கொடையளித்து புகழ்பெற்று விளங்கினார்?

A] திருமுடிக்காரி

B] பாரிவேந்தன்

C] கிள்ளிவளவன்

D] நல்லியக்கோடன்

15) மலையமான் திருமுடிக்காரியின் இரு பிள்ளைகளையும் தன் பட்டத்து யானையின் காலால் இடறிக் கொல்ல முடிவு செய்த சோழ மன்னன் யார்?

A] நரசிம்மவர்மன்

B] முதலாம் மாறவர்மன்

C] நலங்கிள்ளி

D] கிள்ளிவளவன்

16) கீழ்க்கண்ட எந்த மரபில் பிறந்த மன்னர்கள் புறாவுக்கு வந்த துன்பத்தையும் பசுவுக்கு உற்ற துயரத்தையும் நீக்கினர்?

A] சேரர்

B] சோழர்

C] பாண்டியர்

D] பல்லவர்

17) சோழன் நெடுங்கிள்ளி உறையூர் தலைநகரில் இருந்த பொழுது அவரை பாடி பரிசு பெற அங்கு சென்று சிறையில் அடைக்கப்பட்ட புலவர் யார்?

A] மோசிகீரனார்

B] கோவூர்கிழார்

C] இளந்தத்தனார்

D] இளம்பூரனார்

18) 'குறள்நெறி இலக்கிய இலக்கியக் கதைகள்' - என்ற நூலை எழுதியவர் யார்?

A] சே.சுந்தரராசன்

B] ந.பழநியப்பன்

C] க.குப்புசாமி

D] நா.காமராசன்

19) போர் செய்யப் புறப்படுவதற்கு முன்பாக அரசன், தன் அரண்மனையில் வீரர்களுக்கு பெருவிருந்து அளிக்கும் நிகழ்ச்சியானது______எனப்படும்?

A] உற்றார் உணவளித்தல்

B] வீரர்களுக்கு உணவளித்தல்

C] பெருஞ்சாறு படைத்தல்

D] பெருஞ்சோறு அளித்தல்

20) திருச்சிராப்பள்ளி - நகரமானது காவிரி ஆற்றின் கீழ்க்கண்ட எந்தக் கரையில் அமைந்துள்ளது?

A] தென்கரை

B] வடகரை

C] கிழக்குகரை

D] மேற்குகரை

21) கீழ்க்கண்டுள்ள எந்த நகரமானது கோவில்களும் நினைவுச்சின்னங்களும் நிறைந்துள்ள வரலாற்று நகரம் என்று கூறப்படுகிறது?

A] திருவண்ணாமலை

B] கும்பகோணம்

C] திருச்சிராப்பள்ளி

D] தஞ்சாவூர்

22) திருச்சிராப்பள்ளி நகரத்தின் பழம்பெருமைக்கு சான்றாக திகழ்வது எது?

A] ஊமையன்கோட்டை

B] மலைக்கோட்டை

C] முக்கொம்பு

D] புளியஞ்சோலை

23) மலைக்கோட்டையில் கீழ்க்கண்ட எந்த மன்னர் காலத்துச் சிற்பங்களானது காண்போரைக் கவரும் தன்மையுடையதாக அமைந்துள்ளது?

A] சோழர்

B] நாயக்கர்

C] சேரர்

D] பல்லவர்

24) முற்காலத்தில் சோழர்களின் எந்த நகரமானது கோழிமாநகரம் என்று அழைக்கப்பட்டது?

A] புகார்

B] பழையாறு

C] உறையூர்

D] காஞ்சி

25) தொன்மைக்காலத்தில் திருச்சி என்னும் மாநகரமானது கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக அழைக்கப்பட்டது?

A] திரிசிரபுரம்

B] திரிசபுரம்

C] திரிசராபுரம்

D] திருச்சிப்பள்ளி

26) திருச்சியில் எத்தனை ஆண்டு பழமை வாய்ந்த கவின்மிகு கல்லணையானது காவிரி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது?

A] ஓராயிரம்

B] ஈராயிரம்

C] மூவாயிரம்

D] ஈராயிரத்து ஐந்நூறு

27) தமிழகத்தின் எந்த கல்லணையானது பண்டையத் தமிழரின் நீர் மேலாண்மைச் சிந்தனயின் சிகரம் என்று கூறப்படுகிறது?

A] பெரியார்

B] மூணாறு

C] மேட்டூர்

D] கல்லணை

28) தாயுமானவருக்கு ஞானநெறி காட்டிய மௌனகுருவும், தமிழின் முதல் சிறுகதை எழுத்தாளரான வ.வே.சுப்பிரமணியம் பிறந்த மண் எது?

A] மதுரை

B] தஞ்சை

C] திருச்சி

D] காஞ்சி

29) 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' - எனத் தொடங்கும் பாடலானது இடம்பெற்றுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] குறுந்தொகை

C] கலித்தொகை

D] அகநானூறு

30) 'ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே' - எனத் தொடங்கும் புறநானூற்று பாடலை பாடியவர் யார்?

A] இளங்கீரனார்

B] பொன்முடியார்

C] கபிலர்

D] ஔவையார்

31) கோவூர்கிழாரின் பாடல்கள் கீழ்க்கண்ட எந்த நூலில் அதிகபட்சமாக 15 பாடல்களாக இடம் பெற்றுள்ளன?

A] குறுந்தொகை

B] திருவள்ளுவமாலை

C] நற்றிணை

D] புறநானூறு

32) கோவூர் கிழார் என்ற புலவர் கீழ்க்கண்ட எந்த மன்னர்களை பற்றியே அதிகம் பாடியுள்ளார்?

A] பாண்டியர்

B] சேரர்

C] சோழர்

D] களப்பிரர்

33) கோவூர்கிழார் பற்றி போரைத் தவிர்த்த புலவர், மலையமான் பிள்ளைகளைத் காத்தல், இளந்தத்தனார்ச் சிறைமீட்ட செம்மல், ஆகிய நிகழ்ச்சிகளானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] புறநானூறு

B] குறுந்தொகை

C] நற்றிணை

D] திருவள்ளுவமாலை

விடைகள் - கோவூர்கிழார்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 8 | C | 15 | D | 22 | B | 29 | A |
| 2 | D | 9 | A | 16 | B | 23 | D | 30 | B |
| 3 | A | 10 | D | 17 | C | 24 | C | 31 | D |
| 4 | B | 11 | C | 18 | A | 25 | A | 32 | C |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | D | 12 | B | 19 | D | 26 | B | 33 | A |
| 6 | A | 13 | A | 20 | A | 27 | D | | |
| 7 | B | 14 | C | 21 | C | 28 | C | | |

## 5) கணிதமேதை இராமானுஜம்

1) இராமானுஜம் அவர்கள் தமிழகத்தின் கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் பிறந்தார்?

A] திருச்சி

B] ஈரோடு

C] மதுரை

D] இராமநாதபுரம்

2) இராமனுஜம் அவர்கள் பிறந்ததில் இருந்து எத்தனை ஆண்டு காலம் வரை பேசும் திறன் அற்றவராக இருந்தார்?

A] மூன்றாண்டுகள்

B] ஐந்தாண்டுகள்

C] ஏழாண்டுகள்

D] இரண்டாண்டுகள்

3) இராமானுஜர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஊரில் உள்ள திண்ணைப்பள்ளி ஒன்றில் படித்தார்?

A] திருச்சிராப்பள்ளி

B] ஈரோடு

C] கும்பகோணம்

D] காஞ்சிபுரம்

4) தன் தாய் கோமளத்தின் தந்தையார் பணியின் காரணமாக கீழ்க்கண்ட எந்த ஊருக்கு குடியேறினார்?

A] மதுரை

B] காஞ்சிபுரம்

C] கும்பகோணம்

D] ஈரோடு

5) 1880 ஆண்டில் கார் என்பவர் எத்தனையாவது வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கினார்?

A] பன்னிரெண்டு

B] பதினைந்து

C] பதினாறு

D] பதினெட்டு

6) கார் - என்னும் கணிதவியல் அறிஞர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நகரைச் சேர்ந்தவர்?

A] கொலம்பியா

B] வாஷிங்டன்

C] இலண்டன்

D] சுவிட்சர்லாந்து

7) இராமானுஜம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த அறிஞர் போன்று பதினைந்து வயதிலேயே கணிதத்தில் சிறந்து விளங்கினார்?

A] ஹார்டி

B] கார்

C] ஆஸ்கேயூ

D] ஜாகோபி

8) யாருடைய முயற்சியினால் இராமானுஜம் அவர்கள் துறைமுகத்தில் எழுத்தர் பணியில் சேர்ந்தார்?

A] தந்தை

B] தாத்தா

C] தாய்

D] ஆசிரியர்

9) இராமானுஜம் அவர்களுக்கு தன் தந்தை மூலமாக கீழ்க்கண்ட எந்த துறைமுகத்தில் எழுத்தர் பணியானது கிடைத்தது?

A] தூத்துக்குடி

B] எண்ணூர்

C] சென்னை

D] கொச்சி

10) இராமானுஜம் அவர்கள் தாம் கண்டுபிடித்த தேற்றங்களையும், எடுகோள்களையும் வினாக்களாகத் தொகுத்து கீழ்க்கண்ட எவற்றிற்கு அனுப்பினார்?

A] இந்திய கணிதக் கழகப் பல்கலைக்கழகம்

B] இந்திய கணிதக் கழகப் பத்திரிகை

C] இந்திய கணிதக் கழகப் பள்ளி

D] இந்திய கணிதக் கழக நிறுவனம்

11) தான் கண்டுபிடித்த தேற்றங்களையும், எடுகோள்களையும் வினாக்களாகத் தொகுத்து இராமானுஜம் அவர்கள் கீழ்க்கண்ட யார் உதவியுடன் இந்திய கழகப் பத்திரிக்கைக்கு அனுப்பினார்?

A] ஃபிரான்சிஸ் லியோன்

B] ஃபிரான்சிஸ் லாரன்ஸ்

C] ஃபிரான்சிஸ் கரோன்

D] ஃபிரான்சிஸ் ஸ்பிரிங்

12) இராமானுஜம் அவர்கள் எழுதிய தேற்றங்கள் மற்றும் எடுகோள்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு கீழ்க்கண்ட எந்த பெயர் மூலம் இந்திய கணித கழக பத்திரிக்கையால் கட்டுரையாக வெளியிடப்பட்டது?

A] ரோசர்ஸ் இராமனுஜம் கண்டுபிடிப்புகள்

B] பெர்னௌலிஸ் கணிதம்

C] பெர்னௌலிஸ் எண்கள்

D] இராமனுஜம் கண்டுபிடிப்புகள்

13) இராமானுஜம் அவர்கள் துறைமுகத்தில் ஊதியமில்லா விடுப்பு எடுத்துக் கொண்டு கீழ்க்கண்ட எந்த பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மாணவராக சேர்ந்தார்?

A] சென்னை பல்கலைக்கழகம்

B] திரினிட்டி கல்லூரி

C] இலண்டன் பல்கலைக்கழகம்

D] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

14) பல்கலைக்கழகத்தில் இராமானுஜர் ஆராய்ச்சி மாணவராக சேர்ந்த பிறகு தம்முடைய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவற்றை விவரமாக எழுதி கீழ்க்கண்ட யாருக்கு கடிதமாக அனுப்பினார்?

A] கார்

B] லிட்டில்வுட்

C] ஹார்டி

D] ஈ.எச்.நெவில்

15) இராமனுஜம் அவர்கள் கடிதம் அனுப்பும் போது ஹார்டி அவர்கள் கீழ்க்கண்ட எந்த பல்கலைக்கழகத்தில் பேராசிரியாக பணியாற்றி கொண்டிருந்தார்?

A] திரினிட்டி கல்லூரி

B] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

C] சென்னை பல்கலைகழகம்

D] இலண்டன் பல்கலைக்கழகம்

16) ஹார்டி அவர்கள் பேராசிரியாக பணியாற்றிய கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகமானது கீழ்க்கண்ட எந்த நாட்டில் அமைந்துள்ளது?

A] அமெரிக்கா

B] பிரான்ஸ்

C] இரஷ்யா

D] இங்கிலாந்து

17) கீழ்க்கண்ட எந்த பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் ஈ.எச்.நெவில் அவர்கள் சென்னை பல்கலைக்கழகத்திற்கு சொற்பொழிவாற்ற வந்தார்?

A] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

B] ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்

C] திரினிட்டி கல்லூரி

D] கொலம்பியா பல்கலைக்கழகம்

18) ஹார்டி அவர்கள் இராமனுஜத்தை இங்கிலாந்திற்கு அழைத்தார் என்ற செய்தியை இராமானுஜம் அவர்கள் கீழ்க்கண்ட யார் வாயிலாக அறிந்து இங்கிலாந்து செல்ல முடிவெடுத்தார்?

A] ஈ.எச்.நெவில்

B] லிட்டில்வுட்டு

C] ஆர்தர்பெர்சி

D] பேரா.ஈ.டி.பெல்

19) இராமனுஜம் அவர்கள் இங்கிலாந்துக்கு கப்பல் மூலம் புறப்பட்ட ஆண்டு எது?

A] 14-04-1914

B] 17-03-1914

C] 16-02-1914

D] 18-05-1914

20) இராமனுஜம் அவர்கள் திரினிட்டி கல்லூரியில் ஆராய்ச்சி மாணவராக சேர்ந்த நாள் எது?

A] 15-05-1914

B] 16-02-1914

C] 15-03-1914

D] 18-04-1914

21) இராமனுஜத்தின் கணிதத்திறமையைக் கண்டு திரினிட்டி கல்லூரியானத் அவருக்கு எத்தனை நாள்களுக்கு அறுபது பவுண்டு உதவித் தொகையானது வழங்கியது?

A] மாதத்திற்கு ஒன்றுக்கு

B] மூன்று மாதத்திற்கு

C] ஆண்டொன்றுக்கு

D] ஆறு மாதத்திற்கு

22) கீழ்க்கண்ட எந்த கணித பேராசிரியர் அவர்கள் கேம்பிரிட்ஜ் மாணவர்களுக்கு சிறப்புக் கணிதம் நடத்திக் கொண்டிருந்தார்?

A] லிட்டில்வுட்

B] ஆர்தர்பெர்சி

C] சூலியன் கக்சுலி

D] பேரா.ஈ.டி.பெல்

23) பேராசிரியர் ஆர்தர்பெர்சி அவர்கள் கீழ்க்கண்ட எந்த கல்லூரியைச் சேர்ந்தவர் ஆவார்?

A] கிங்ஸ் கல்லூரி

B] திரினிட்டி கல்லூரி

C] சென்னைக் கல்லூரி

D] கேம்பிரிட்ஜ் கல்லூரி

24) ரோசர்ஸ் இராமானுஜன் கண்டுபிடிப்புகள் - என்னும் தலைப்பில் இராமானுஜத்தின் வழிமுறைகளை நூலாக வெளியிட்டு இராமானுஜத்திற்கு பெருமை சேர்த்தவர் யார்?

A] லார்ட்மெண்ட் லண்ட்

B] ரிச்சர்ட்

C] ஹார்டி

D] பேராசிரியர் சூலியன் கக்சுலி

25) இராமானுஜத்தின் திறமையை அறிந்த கீழ்க்கண்ட எந்த பல்கலைக்கழகமானது அவருக்கு எஃப்.ஆர்.எஸ் பட்டத்தை வழங்கியது?

A] கொலம்பியா பல்கலைக்கழகம்

B] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

C] சென்னை பல்கலைக்கழகம்

D] இங்கிலாந்து பல்கலைக்கழகம்

26) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது இராமனுஜம் அவர்களுக்கு எஃப்.ஆர்.எஸ் பட்டமானது வழங்கப்பட்டது?

A] 1916

B] 1918

C] 1917

D] 1919

27) ஒருவரது திறமைகள் பிறர் வியக்கத்தக்க வகையில் இருந்தால் அவருக்கு கீழ்க்கண்ட எந்த பட்டமானது வழங்கப்படுகிறது?

A] கணிதவியல் விஞ்ஞானி

B] கணிதவியல் பேராசிரியர்

C] எஃப்.ஆர்.எஸ்

D] கணித வல்லுநர்

28) எஃப்.ஆர்.எஸ் பட்டம் பெற்ற இராமானுஜத்தைத் திரினிட்டி கல்லூரி பாராட்டி கீழ்க்கண்ட எந்த பதவியை அளித்து சிறப்பித்தது?

A] கல்விக்குழுவின் சிறப்பு உறுப்பினர்

B] கல்விக்குழுவின் சிறப்பு தலைவர்

C] கல்விக்குழுவின் துணைத்தலைவர் தலைவர்

D] கல்லூரியின் துணைத்தலைவர்

29) எஃப்.ஆர்.எஸ் பட்டத்தை பெற்ற இராமானுஜத்தை பாராட்டி திரினிட்டி கல்லூரியானது அவருக்கு எத்தனை பவுண்டு தொகையை அளிக்க ஏற்பாடு செய்தது?

A] 200 பவுண்டு

B] 150 பவுண்டு

C] 250 பவுண்டு

D] 225 பவுண்டு

30) இராமானுஜம் அவர்களுக்கு 250 பவுண்டு தொகையை திரினிட்டி கல்லூரியானது எத்தனை ஆண்டுகளுக்கு வழங்க ஏற்பாடு செய்தது?

A] ஆறு ஆண்டுகள்

B] ஒரு ஆண்டுகள்

C] இரு ஆண்டுகள்

D] மூன்று ஆண்டுகள்

31) யாருடைய பரிந்துரையின் பேரில் இராமானுஜத்திற்கு 250 பவுண்டு தொகையை அளிக்க சென்னை பல்கலைக்கழகம் முன்வந்தது?

A] லார்ட்மெண்ட் லண்ட்

B] ஈ.டி.பெல்

C] லிட்டில்வுட்

D] ஹார்டி

32) சென்னை பல்கலைக்கழகமானது 250 பவுண்டு தொகையை இராமனுஜம் அவர்களுக்கு எத்தனை ஆண்டுகளுக்கு வழங்க முன்வந்தது?

A] ஆறு ஆண்டுகள்

B] ஐந்து ஆண்டுகள்

C] நான்கு ஆண்டுகள்

D] மூன்று ஆண்டுகள்

33) சென்னை பல்கலைக்கழகம் கொடுக்க முன்வந்த 250 பவுண்டு தொகையில் 50 பவுண்டை கீழ்க்கண்ட யாருக்கு வழங்கி வருமாறு இராமானுஜம் கடிதம் எழுதினார்?

A] பள்ளிக்கு

B] ஏழை எளிய மாணவர்கள்

C] பெற்றோர்

D] தன் ஆராய்ச்சிக்கு

34) சென்னை பல்கலைக்கழகம் கொடுக்க முன்வந்த 250 பவுண்டு தொகையில் 200

பவுண்டு தொகையை கீழ்க்கண்ட யாருக்கு வழங்கி வருமாறு இராமானுஜம் கடிதம் எழுதினார்?

A] ஏழை எளிய மாணவர்கள்

B] தான் படித்த பள்ளிக்கு

C] தன் பெற்றோர்களுக்கு

D] தன் நண்பர்களுக்கு

35) இராமானுஜம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நோயால் பாதிக்கப்பட்டார்?

A] காசநோய்

B] புற்றுநோய்

C] மூளைச்சாவு

D] இருதநோய்

36) இராமானுஜத்தை காசநோய் தாக்கி அவர் படுக்கையில் இருந்த போது அவரைக் காண வந்த ஹார்டியின் வாடகை மகிழுந்தின் எண் யாது?

A] 1739

B] 1719

C] 1730

D] 1729

37) கீழ்க்கண்ட எந்த எண் இருவகைகளிலே இரு கனங்களின் கூட்டுத்தொகையாக வரும் எண்களில் மிகச்சிறிய எண் என்று இராமானுஜம் குறிப்பிடுகிறார்?

A] 1719

B] 1729

C] 1723

D] 1727

38) இராமானுஜம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நாளின் போது இங்கிலாந்திலிருந்து மீண்டும் இந்தியாவிற்கு திரும்ப நினைத்து மும்பைக்கு கப்பலில் வந்து இறங்கினார்?

A] 1919 ஜீன் 22

B] 1918 ஏப்ரல் 25

C] 1919 மார்ச் 27

D] 1919 மே 17

39) இராமானுஜம் அவர்கள் இங்கிலாந்திலிருந்து மீண்டும் சென்னை வந்து சேர்ந்த ஆண்டு எது?

A] 1919

B] 1920

C] 1921

D] 1918

40) இராமானுஜம் அவர்களுக்கு கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது காசநோய் தாக்கியது?

A] 1916

B] 1919

C] 1917

D] 1918

41) கணிதமேதை இராமானுஜம் அவர்களின் பிறப்பு - இறப்பு ஆண்டுகள் யாது?

A] 1886 - 1920

B] 1889 - 1921

C] 1888 - 1919

D] 1887 - 1920

42) இராமனுஜம் அவர்கள் காசநோயால் பாதிக்கப்பட்டு இறந்த பொழுது அவரின் வயது யாது?

A] முப்பத்து இரண்டு

B] முப்பத்து மூன்று

C] முப்பத்து ஐந்து

D] முப்பத்து ஒன்று

43) 'ஆய்லராக இல்லாவிட்டாலும் இராமானுஜன் குறைந்த பட்சம் ஒரு ஜாகோபி' - என்று இராமானுஜத்தை பாராட்டியவர் யார்?

A] ஆர்தர்பெர்சி

B] இந்திராகாந்தி

C] லிட்டில்வுட்டு

D] பேரா.ஈ.டி.பெல்

44) ஆய்லர் - என்பவர் கீழ்க்கண்ட எந்த நாட்டைச் சேர்ந்த இணையற்ற கணிதமேதை ஆவார்?

A] சுவிட்சர்லாந்து

B] செருமேனி

C] இரஷ்யா

D] இங்கிலாந்து

45) ஜாகோபி - என்பவர் கீழ்க்கண்ட எந்த நாட்டைச் சேர்ந்த இணையற்ற கணிதமேதை ஆவார்?

A] மெக்சிகோ

B] அமெரிக்கா

C] இங்கிலாந்து

D] செருமேனி

46) ஆய்லர் என்பவர் கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற கணிதமேதை ஆவார்?

A] 16 ஆம் நூற்றாண்டு

B] 18 ஆம் நூற்றாண்டு

C] 19 ஆம் நூற்றாண்டு

D] 17 ஆம் நூற்றாண்டு

47) ஜாகோபி என்பவர் கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டில் வாழ்ந்த இணையற்ற கணிதமேதை ஆவார்?

A] 19 ஆம் நூற்றாண்டு

B] 20 ஆம் நூற்றாண்டு

C] 18 ஆம் நூற்றாண்டு

D] 16 ஆம் நூற்றாண்டு

48) 'கணிதத் திறமையால் விஞ்ஞான உலகினைப் பிரமிக்கச் செய்து வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஓர் இடத்தை பெற்ற பிறவிக் கணிதமேதை' - என்று இராமனுஜத்தை பாராட்டியவர் யார்?

A] லார்ன்மெண்ட் லண்ட்

B] ஈ.எச்.நெவில்

C] ஹார்டி

D] இந்திராகாந்தி

49) 'இராமானுஜன் சாதாராண மனிதரல்லர். அவர் இறைவன் தந்த பரிசு' - என்று கூறியவர் யார்?

A] ரிச்சர்ட்

B] பேரா.ஈ.டி.பெல்

C] லார்ட்மெண்ட் லண்ட்

D] பேராசிரியர் சூலியன் கக்சுலி

50) 'இராமானுஜன் முதல் தரமான கணித மேதை' - என்று கூறியவர் யார்?

A] பேரா.ஈ.டி.பெல்

B] ஆஸ்கேயூ

C] லார்ட்மெண்ட் லெண்ட்

D] இந்திராகாந்தி

51) 'இராமானுஜன் தான் இந்த 20ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய கணிதமேதை' - என்று கூறியவர் யார்?

A] பேராசிரியர் சூலியன் கக்சுலி

B] ரிச்சர்ட்

C] இந்திராகாந்தி

D] லார்மெண்ட் லண்ட்

52) லார்ட்மெண்ட் லண்ட் - என்பவர் கீழ்க்கண்ட எந்த நகரத்தின் ஆளுநர் ஆவார்?

A] டோக்கியோ

B] இலண்டன்

C] வாஷிங்டன்

D] கலிபோர்னியா

53) இராமானுஜம் அவர்களுக்கு கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது நடுவணராசனது அஞ்சல் தலையை வெளியிட்டுள்ளது?

A] 1962

B] 1963

C] 1961

D] 1960

54) நடுவணராசனது கீழ்க்கண்ட எந்த மதிப்பிலான அஞ்சல் தலையை இராமனுஜம் பெயரில் வெளியிட்டது?

A] பதினான்கு காசு

B] பதினாறு காசு

C] பதினெட்டு காசு

D] பதினைந்து காசு

55) இராமனுஜம் பெயரில் மத்திய அரசானது மொத்தம் எத்தனை இலட்சம் அஞ்சல் தலைகளை வெளியிட்டது?

A] இருபத்திரண்டு இலட்சம்

B] இருபத்தைந்து இலட்சம்

C] இருபது இலட்சம்

D] இருபத்தான்கு இலட்சம்

56) இராமானுஜம் அவர்களின் எத்தனையாவது பிறந்த நாளின் போது மத்திய அரசானது அவருக்கு அஞ்சல் தலை வெளியிட்டு சிறப்பித்தது?

A] 50 வது பிறந்த நாள்

B] 60 வது பிறந்த நாள்

C] 75 வது பிறந்த நாள்

D] 100 வது பிறந்த நாள்

57) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது பேராசிரியர் இராமானுஜம் அனைத்துலக நினைவுக்குழுவானது அமைக்கப்பட்டது?

A] 1971

B] 1972

C] 1970

D] 1973

58) பேராசிரியர் இராமனுஜம் அனைத்துலக நினைவுக்குழுவானது கீழ்க்கண்ட எந்த இடத்தில் அமைக்கப்பட்டது?

A] கும்பகோணம்

B] இங்கிலாந்து

C] காஞ்சிபுரம்

D] சென்னை

59) சென்னையில் கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனமானது திறந்து வைக்கப்பட்டது?

A] 1971

B] 1972

C] 1973

D] 1970

60) சென்னையில் இராமானுஜம் கணித அறிவியல் நிறுவனமானது கீழ்க்கண்ட எந்த தமிழக முதலமைச்சரால் திறந்து வைக்கப்பட்டது?

A] சி.என்.அண்ணாதுரை

B] எம்.ஜி.ராமச்சந்திரன்

C] மு.கருணாநிதி

D] ஜெ.ஜெயலலிதா

61) இராமானுஜம் பணியாற்றிய சென்னைத் துறைமுகம் சார்பில் புதியதாக வாங்கிய கீழ்க்கண்ட எந்த கப்பலுக்கு சீனிவாச இராமானுஜம் எனப் பெயர் சூட்டப்பட்டது?

A] குடிநீர்க்கப்பல்

B] போர்க்கப்பல்

C] வர்த்தக கப்பல்

D] சரக்குக் கப்பல்

62) இராமானுஜம் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது ரிச்சர்ட்டும் ஆஸ்கேயும் இணைந்து மார்பளவு சிலையை இந்தியாவிற்கு கொண்டு வந்தனர்?

A] 1982

B] 1984

C] 1983

D] 1981

63) ரிச்சர்ட் மற்றும் ஆஸ்கேயூ ஆகிய இருவரும் கீழ்க்கண்ட எந்த பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்களாக பணியாற்றி இருந்தனர்?

A] இலண்டன் பல்கலைக்கழகம்

B] கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்

C] சென்னை பல்கலைக்கழகம்

D] விசுகன்சீன் பல்கலைக்கழகம்

64) இராமானுஜம் அவர்களுக்கு ரிச்சர்ட் மற்றும் ஆஸ்கேயூம் இணைந்து கீழ்க்கண்ட எந்த சிலையை இந்தியாவிற்கு கொண்டு வந்தனர்?

A] தங்க சிலை

B] வெள்ளி சிலை

C] வெண்கல சிலை

D] பிளாட்டின சிலை

65) இராமானுஜத்தின் குறிப்பேடுகளில் 3000 முதல் 4000 தேற்றங்களை கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது டாடா அடிப்படை ஆராய்ச்சி நிலையம், அப்படியே ஒளிப்படம் எடுத்து நூலாக வெளியிட்டுள்ளது?

A] 1960

B] 1957

C] 1961

D] 1964

66) இராமானுஜம் ஆசிரியரிடம் கீழ்க்கண்ட எந்த எண்ணானது மதிப்புடையது என வாதிட்டார்?

A] சுழியம்

B] ஒன்று

C] நூறு

D] ஐம்பது

67) இராமனுஜத்தின் தேற்றங்களையும் எடுகோள்களையும் வினாக்களாக தொகுத்து இந்திய கணித கழகப் பத்திரிக்கைக்கு அனுப்பிய பிரான்சிஸ் ஸ்பிரிங் என்பவர் சென்னை துறைமுகத்தில் கீழ்க்கண்ட எப்பணியில் இருந்தார்?

A] சென்னைத் துறைமுகத்தின் அலுவலக தலைவர்

B] சென்னைத் துறைமுகத்தின் பொறியாளார்

C] சென்னைத் துறைமுகத்தின் தலைமைப் பொறியாளர்

D] சென்னை துறாய்முகத்தின் எழுத்தர் பணியின் திருத்தர்

68) சென்னை துறைமுகத்தில் உள்ள கப்பலுக்கு 'சீனிவாச இராமானுஜம்' என்னும் பெயர் சூட்டப்பட்டதில் சீனிவாசன் என்னும் பெயரானது கீழ்க்கண்ட யாரைக் குறித்தது?

A] துறைமுக தலைவர்

B] ஆசிரியர்

C] நண்பர்

D] தந்தை

69) கீழ்க்கண்டவற்றில் எந்த நாளானது கணித தினமாக கொண்டாடப்படுகிறது?

A] ஏப்ரல் 26

B] டிசம்பர் 22

C] ஜீன் 21

D] ஆகஸ்ட் 22

70) இந்திய அரசானது இராமானுஜத்தின் கீழ்க்கண்ட எந்த ஆண்டை கணித ஆண்டாக அறிவித்தது?

A] 2012

B] 2011

C] 2013

D] 2010

71) இராமானுஜம் அவர்களின் கீழ்க்கண்ட எத்தனையாவது பிறந்த நாளை கொண்டாடும் பொழுது மத்திய அரசனாது அந்த ஆண்டை கணித ஆண்டாக அறிவித்தது?

A] 100 வது பிறந்த நாள்

B] 150 வது பிறந்த நாள்

C] 125 வது பிறந்த நாள்

D] 175 வது பிறந்த நாள்

72) ஹார்டி அவர்களின் கீழ்க்கண்ட எந்த நூலை படித்த பிறகு இராமானுஜம் அவர்கள் அவருக்கு கடிதம் எழுதினார்?

A] தியரி ஆ∴ப் ஈகுவேசன்ஸ்

B] ஆர்டர் ஆ∴ப் இன்பினிட்டி

C] தியரி ஆ∴ப் நம்பர்ஸ்

D] தியரி ஆ∴ப் பார்டிஷன்ஸ்

## விடைகள் - கணிதமேதை இராமானுஜம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 16 | D | 31 | D | 46 | B | 61 | A |
| 2 | A | 17 | C | 32 | B | 47 | A | 62 | B |
| 3 | D | 18 | A | 33 | C | 48 | D | 63 | D |
| 4 | C | 19 | B | 34 | A | 49 | B | 64 | C |
| 5 | B | 20 | D | 35 | A | 50 | C | 65 | B |
| 6 | C | 21 | C | 36 | D | 51 | A | 66 | A |
| 7 | B | 22 | B | 37 | B | 52 | B | 67 | C |
| 8 | A | 23 | A | 38 | C | 53 | A | 68 | D |
| 9 | C | 24 | C | 39 | A | 54 | D | 69 | B |
| 10 | B | 25 | D | 40 | C | 55 | B | 70 | A |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | D | 26 | B | 41 | D | 56 | C | 71 | C |
| 12 | C | 27 | C | 42 | B | 57 | A | 72 | B |
| 13 | A | 28 | A | 43 | C | 58 | D | | |
| 14 | C | 29 | C | 44 | A | 59 | B | | |
| 15 | B | 30 | A | 45 | D | 60 | C | | |

## 6) நன்றிப்பரிசு

1) இருநூறு ஆண்டுக்கு முன்பு சிவகங்கைப் பகுதியை ஆண்டு வந்த மன்னன் யார்?

A] மருதுபாண்டி

B] புலித்தேவன்

C] வேலுநாச்சியார்

D] வடுகநாதர்

2) குடிமக்களையும், குல தெய்வத்தையும் ஒரே மாதிரி போற்றி நேசித்த மன்னர் யார்?

A] ஊமைத்துரை

B] கட்டபொம்மன்

C] புலித்தேவன்

D] மருதுபாண்டி

3) கீழ்க்கண்ட எந்த ஊரில் ஒரு நாள் தன் வலக்கையில் ஏற்பட்ட காரணமாக மருதுபண்டி மன்னர் அவர்கள் அங்கு தங்கினார்?

A] திருக்கோவிலூர்

B] திருக்கோட்டியூர்

C] திருவல்லிப்புத்தூர்

D] திருவரங்கம்

4) மருதுபாண்டி மன்னன் அந்த பெண்மணியிடம் அம்மா பசியும் தாகமும் என்னை மிகவும் வருத்துகின்றன; சாப்பிட ஏதாவது இருந்தால் கொடுங்கல்' - என்று இரைஞ்சும் போது அவருடைய குரலை கீழ்க்கண்ட எவ்வுமையோடு ஆசிரியர் ஒப்பிடுகிறார்?

A] நீருக்குள் அடியிலிருந்து பேசுவது போல் இருந்தது

B] குழிக்குள் இருந்து பேசுவது போல் இருந்தது

C] கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போல் ஒலித்தது

D] தூரத்தில் இருந்து பேசுவது போல் இருந்தது

5) பசி என்று கேட்ட மருதுபாண்டி மன்னருக்கு அந்த வயதான பெண்மணி அவருக்கு அளித்த உணவு யாது?

A] சுடச்சோறு

B] பழைய சோறு

C] அறுசுவை உணவு

D] சுவை மிகுந்த கனிகள்

6) பழைய சோற்றுக்கு தொட்டுக் கொள்ள அந்த பெண்மணி மருதுபாண்டிக்கு வைத்த பொருள் யாது?

A] நெல்லிக்காய் ஊறுகாய்

B] மாங்காய் ஊறுகாய்

C] நாற்றங்காய் ஊறுகாய்

D] பூண்டு ஊறுகாய்

7) 'நான் அரசோச்சிய காலத்தில் யார் யாருக்கு எந்தெந்த ஊர்களைத் தானமாக வழங்கினேனோ அவற்றை அவரவர்களுக்கே உரிமையாக்குதல் வேண்டும். இதுவே என் இறுதி விருப்பம்' - என்று கூறிய மன்னன் யார்?

A] கட்டபொம்மன்

B] முத்துவடுகநாதர்

C] வேலுநாச்சியார்

D] மருதுபாண்டி

8) மருதுபாண்டி மன்னன் அந்த வயதான பெண்மணிக்கு தானமாக அளித்த ஊர் யாது?

A] சிவகங்கை

B] திருநெல்வேலி

C] பழஞ்சோற்றுக் குருநாதனேந்தல்

D] கள்ளக்குறிச்சி

9) தினையளவு உதவிக்கு பனையளவு நன்றியை மறவாமல் செலுத்திய மன்னர் என்று பாராட்டப்படும் மன்னர் யார்?

A] விஜயரங்கநாதர்

B] மருதுபாண்டி

C] சொக்கநாதர்

D] புலித்தேவர்

10) முத்துக்கதைகள் என்னும் நூலை எழுதியவர் யார்?

A] நீலவன்

B] விந்தன்

C] ந.பழநியப்பன்

D] ஐஸ்வர்ஷியனி

11) உடல் நலமில்லாமல் இருந்த நிலையிலும் எழுத்துப் பணியினை விடாமல் செய்து கொண்டிருந்த இந்திமொழி எழுத்தாளர் யார்?

A] இரவீந்திரநாத் தாகூர்

B] பக்கிம்சந்த் சட்டர்ஜி

C] பிரேம் சந்த்

D] அரவிந்த் கோஷ்

12) பிரேம் சந்த் அவர்களின் உடல்நிலை சரியில்லாத்தைக் கண்டு 'ஏன் இப்படி உங்களை வருத்திக் கொள்கிறீர்கள்? சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும். எழுதுவதனை நிறுத்தி உங்கள் உடல்நலத்தில் அக்கறை செலுத்துங்கள்' - என்று பிரேம் சந்த் பார்த்து கூறியவர் யார்?

A] பெற்றோர்

B] ஆசிரியர்

C] நண்பர்

D] மனைவி

13) உடல் நலம் பாதித்தபோதும் எடுத்த வேலையை முடிக்காது, அவ்விடத்தை விட்டுச் செல்ல விரும்பாமல் கடமையை பெரிது என வாழ்ந்த இந்தியமொழி கவிஞர் யார்?

A] பிரேம் சந்த்

B] தயானந்த சரஸ்வதி

C] அரவிந்தர் கோஷ்

D] இரவீந்திரநாத் தாகூர்

14) 'மனத்தை ஒருமுகப்படுத்துவதில் தான் அனைத்தும் இருக்கிறது. அவ்வாறு செய்யும் போது எந்தவொரு செயலும் வெற்றியைத் தரும்' - என்றவர் யார்?

A] அரவிந்தர் போஷ்

B] இரவீந்திரநாத் தாகூர்

C] விவேகானந்தர்

D] தயானந்த சரஸ்வதி

15) ஆடற்கலையானது பழங்காலத்தில் கீழ்க்கண்ட எந்த பெயரில் அழைக்கப்பட்டது?

A] தெருக்கலை

B] கூத்துக்கலை

C] நடனக்கலை

D] பாவைக்கூத்து

16) கீழ்க்கண்டவற்றில் கட்புலனாம் இன்பத்தை தரும் கலை எது?

A] நாடகக்கலை

B] புராணக்கலை

C] ஆடற்கலை

D] மருத்துவக்கலை

17) தமிழக இராஜாங்கத்தின் தேசிய மிருகங்களான வரையாடுகள் கீழ்க்கண்ட எந்த ஊரில் பெருமளவில் ஜீவித்து வருகின்றன?

A] திண்டுக்கல்

B] கொடைக்கானல்

C] நீலகிரி

D] உதகைமண்டலம்

18) கைவழிக் கண்களும் கண்வழி மனமும் செல்ல ஆடுதலே_____நுட்பமாகும்?

A] நாடகத்தின்

B] ஆடலின்

C] கூத்தின்

D] பாடலின்

விடைகள் - நன்றிப்பரிசு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 5 | B | 9 | B | 13 | A | 17 | D |
| 2 | D | 6 | A | 10 | A | 14 | C | 18 | B |
| 3 | B | 7 | D | 11 | C | 15 | B | | |
| 4 | C | 8 | C | 12 | D | 16 | C | | |

## 7) காந்தியடிகள் கடிதம்

1) காந்தியடிகள் கீழ்க்கண்ட எந்த இடத்தில் ஆற்றிய உரயானது நமக்கு பாடப்பகுதியாக கொடுக்கப்பட்டுள்ளது?

A] மகாராஷ்டிரா

B] தண்டி

C] டெல்லி

D] குஜராத்

2) காந்தி அவர்கள் கீழ்க்கண்டவற்றில் தன் எத்தனையாவது பிறந்த நாளின் போது உரையாற்றிய நிகழ்ச்சியானது நமக்கு பாடப்பகுதியாக அளிக்கப்பட்டுள்ளது?

A] 45 வது பிறந்தநாள்

B] 49 வது பிறந்தநாள்

C] 50 வது பிறந்தநாள்

D] 75 வது பிறந்தநாள்

3) கல்வி கற்பித்தலில் நாம் செய்ய வேண்டிய முதல் செயல் எதுவென்று காந்தியடிகள் கூறுகிறார்?

A] பயிற்றுமொழியை அனைவருக்கும் கற்பிப்பது

B] தமிழ்மொழி பற்றி நிறைவான முழிவுக்கு வருவது

C] பயிற்றுமொழி பற்றி தெளிவான முடிவுக்கு வருவது

D] தனிமொழியை பற்றி விளக்கி கூறுவது

4) கீழ்க்கண்ட எந்த மொழியைக் குறித்துச் சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது, அடித்தளம் இல்லாமல் கட்டடத்தை எழுப்புவதனைப் போன்றது என்று காந்தி கூறுகிறார்?

A] பயிற்றுமொழி

B] உயர்மொழி

C] தமிழ்மொழி

D] தனிமொழி

5) கவி இரவீந்திரநாத் தாகூரின் ஈர்ப்பான இலக்கிய நடைக்கு காரணம் யாது?

A] பயிற்றுமொழி மீது இருந்த பற்று

B] வடமொழி மீது இருந்த ஆர்வம்

C] ஆங்கிலத்தில் அவருக்கு இருந்த அறிவு

D] தாய்மொழி மீது இருந்த பற்று

6) முன்சிராம் பேசும்போது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாடுடன் இருக்க காரணம் யாது?

A] ஆங்கில மொழி

B] வடமொழி

C] தாய்மொழி

D] தெலுங்கு மொழி

7) உயர்ந்த மனம்படைத்த மதன்மோகன் மாளவியாவின் கீழ்க்கண்ட எந்த மொழிப் பேச்சுனாது தங்கத்தை போன்று ஒளி வீசுவதாக காந்தி கூறுகிறார்?

A] வங்கமொழி

B] தாய்மொழி

C] ஆங்கிலமொழி

D] வடமொழி

8) 'வேலை தெரியாத தொழிலாளி, தன் கருவியின் மீது சீற்றம் கொண்டானாம்' - என்ற பழமொழியானது கீழ்க்கண்ட எந்த மொழியைச் சேர்ந்தது?

A] ஆங்கில மொழி

B] தமிழ் மொழி

C] வங்க மொழி

D] தெலுங்கு மொழி

9) பள்ளிக்கூடமானது எதைப் போன்று இருக்க வேண்டும் என்று காந்திஜி கூறுகிறார்?

A] கிராமம்

B] நகரம்

C] சோலை

D] வீட்டை

10) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது நடைபெற்ற கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய உரை, மாணவர்கள் ஏற்ற வண்ணம் கடித வடிவில் நமக்கு பாடமாக அளிக்கப்பட்டுள்ளது?

A] 1916

B] 1917

C] 1919

D] 1918

11) 1917 ஆம் ஆண்டு கீழ்க்கண்ட எத்தனையாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் தலைமை உரையை நிகழத்தினார்?

A] முதலாவது கல்வி மாநாடு

B] மூன்றாவது கல்வி மாநாடு

C] இரண்டாவது கல்வி மாநாடு

D] ஐந்தாவது கல்வி மாநாடு

12) 1917 ஆண்டு 2 வது கல்வி மாநாடானது குஜராத் மாநிலத்தில் உள்ள எந்த நகரில் நடைபெற்றது?

A] புரோச்

B] வதோரா

C] ராஜ்கோட்

D] போர்பந்தர்

விடைகள் - காந்தியடிகள் கடிதம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 2 | B | 3 | C | 4 | A | 5 | D |
| 6 | C | 7 | B | 8 | A | 9 | D | 10 | B |
| 11 | C | 12 | A | | | | | | |

## 8) உரியது

1) உரியது - என்ற சிறுகதையானது கீழ்க்கண்ட எந்த நூலில் அமைந்துள்ளது?

A] மரியாதைராமன் கதைகள்

B] சிந்தனை செல்வம்

C] முத்துக்கதைகள்

D] வரலாற்றுக் கதைகள்

2) சிந்தனைச் செல்வம் - என்ற நூலை எழுதியவர் யார்?

A] ஆறுமுக நாவலர்

B] குன்றக்குடி அடிகளார்

C] கிருபானந்த வாரியார்

D] பாரதியார்

3) 'தொன்மைமிக்க உலகமொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மை, முன்மை, எளிமை, ஒளிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, பெருமை, திருமை, இயன்மை, வியன்மை, என்னும் பல்வகைச் சிறப்புகள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருக்கிறது' - என்று கூறியவர் யார்?

A] தேவநேயப் பாவாணர்

B] மறைமலையடிகள்

C] பரிதிமாற்கலைஞர்

D] சம்பந்த முதலியார்

4) இந்த உலகில் நீரின்றி உலகில் எந்த உயிரும் இயங்க இயலாது என்பதை 'நீரின்றமையாது உலகு' என்று கூறியவர் யார்?

A] நக்கீரர்

B] கபிலர்

C] ஔவையார்

D] திருவள்ளுவர்

5) வள்ளுவர் அவர்கள் மழைநீரின் சிறப்பையும், இன்றியாமையும் உணர்த்தும் வகையில் கீழ்க்கண்ட எந்த அதிகாரத்தை படைத்துப் புகழ்ந்து உரைக்கின்றார்?

A] இல்வாழ்க்கை

B] வான்சிறப்பு

C] குறிப்பறிதல்

D] புலவி நுணக்கம்

6) 'மாமழை போற்றதும் மாமழை போற்றதும்' - என்ற வரியானது இடம்பெற்றுள்ள நூல் எது?

A] கம்பராமாயணம்

B] சீவகசிந்தாமணி

C] சிலப்பதிகாரம்

D] திருக்குறள்

7) 'நீர் நிற்க, நான் இருக்க, இந்தச் சிறப்பு ஒன்று போதாதா?' - என்று கூறியவர் யார்?

A] பட்டினத்தடிகள்

B] காளமேகப்புலவர்

C] இராமச்சந்திர கவிராயர்

D] மறைமலையடிகள்

8) பெரியவரின் தருமக்கணக்கில் செலவழித்துள்ள பணம் எவ்வளவு?

A] இருபத்து மூன்றாயிரம்

B] இருபத்து நாங்காயிரம்

C] இருபத்து இரண்டாயிரம்

D] இருபத்து ஐயிராயரம்

9) நாள் ஒன்றுக்கு எத்தனை மணிநேரம் பெரியவர் கடவுளை பூஜை செய்வதாக முனிவரிடம் கூறினார்?

A] இரண்டு மணிநேரம்

B] அரை மணிநேரம்

C] ஒரு மணிநேரம்

D] ஒன்றரை மணிநேரம்

10) கீழ்க்கண்ட எந்த வயதிலிருந்து அந்த பெரியவர் கடவுளை வழிபடுவதாக முனிவரிடம் கூறினார்?

A] ஐந்து வயது

B] மூன்று வயது

C] பத்து வயது

D] எட்டு வயது

விடைகள் - உரியது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | C | 3 | A | 4 | D | 5 | B |
| 6 | C | 7 | A | 8 | C | 9 | D | 10 | A |

## 9) தூங்கா நகர்

1) தமிழகத்தில் கீழ்க்கண்ட எந்த நகரம் 'தூங்கா நகரம்' என அழைக்கப்படுகிறது?

A] திருச்சி

B] கோவை

C] தஞ்சை

D] மதுரை

2) தமிழ்நாட்டின் கீழ்க்கண்ட எந்த நகரத்தில் ஆண்டின் எல்லா நாளிலும் விழாக்கள் நடைபெறுவதால் அந்நகரம் 'திருவிழா நகர்' என அழைக்கப்படுகிறது?

A] மதுரை

B] காஞ்சி

C] திருச்சி

D] கன்னியாகுமரி

3) கீழ்க்கண்ட எந்த நகரமானது நாற்றிசையிலும் கலையழகு பொருந்திய மாபெருங் கோபுரங்களோடு எட்டுச்சிறிய கோபுரங்களையும் கொண்டு, எழில்மிகு சிற்பக்கலை கூடமாக விளங்குவதால் அந்நகரம் 'கோவில் மாநகரம்' என அழைக்கப்படுகிறது?

A] காஞ்சி

B] தஞ்சை

C] மதுரை

D] தூத்துக்குடி

4) பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டிலாகத் திகழந்த 'தென்னிந்தியாவின் ஏதென்ஸ்' - என அழைக்கப்படும் நகர எது?

A] நீலகிரி

B] மதுரை

C] தஞ்சை

D] காரைக்கால்

5) இன்றைய தமிழகத்தின் இரண்டாவது பெருநகராமாக திகழும் நகரம் எது?

A] சென்னை

B] கோவை

C] மதுரை

D] திருச்சி

6) சங்கம் வைத்து செந்தமிழ் வளர்த்த நகரம் என புகழப்படும் நகரம் எது?

A] மதுரை

B] கோவை

C] சென்னை

D] தஞ்சை

7) மதுரை என்னும் சொல்லுக்கு____என்று பெயர்?

A] பொறுமை

B] பழைமை

C] புதுமை

D] இனிமை

8) 'மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்' - எனத் தொடங்கும் பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] பரிபாடல்

C] கலித்தொகை

D] குறுந்தொகை

9) மதுரையும் கீழ்க்கண்டவற்றில் உள்ள எதுவும் இணைந்து இனிமையின் இயல்பாய் அமைந்தவை என்று கூறப்படுகிறது?

A] நகரம்

B] கோவில்

C] தமிழ்

D] கல்வி

10) 'தமிழ்கெழு கூடல்' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] குறுந்தொகை

B] பதிற்றுப்பத்து

C] அகநானூறு

D] புறநானூறு

11) கீழ்க்கண்ட எந்த நூலில் மதுரையின் சிறப்பை கூறும் 'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை' என்ற வரியானது இடம்பெற்றுள்ளது?

A] மதுரைக்காஞ்சி

B] சிறுபாணாற்றுப்படை

C] குறிஞ்சிப்பாட்டு

D] பெரும்பாணாற்றுப்படை

12) மதுரையின் சிறப்பைக் கூறிய தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மறுகின் மதுரை' - என்ற வரியைப் பாடிய புலவர் யார்?

A] நல்லூர் நத்தத்தனார்

B] உருத்திரங்கண்ணார்

C] நக்கீரர்

D] பெருங்குன்றூர்கிழார்

13) 'ஓங்குசீர் மதுரை', 'மதுரை மூதூர் மாநகர்', 'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை', 'மாண்புடை மரபின் மதுரை', 'வானவர் உறையும் மதுரை', 'பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்' - எனப் பற்பல அடைமொழிகளால் மதுரைக்கு புகழாரம் சூட்டிய புலவர் யார்?

A] திருத்தக்கத்தேவர்

B] நல்லூர் நத்தத்தனார்

C] இளங்கோவடிகள்

D] மதுரை கூடலூர் கிழார்

14) பொருத்துக:

1) சேரநாடு - முத்துடைத்து;

2) சோழநாடு - வேழமுடைத்து;

3) பாண்டியநாடு - சான்றோர் உடைத்து;

4) தொண்டைநாடு - சோறுடைத்து;

A] 4 3 2 1

B] 3 1 4 2

C] 1 2 3 4

D] 2 4 1 3

15) சேரநாடு வேழமுடைத்து, சோழநாடு சோறுடைத்து, பாண்டியநாடு முத்துடைத்து, தொண்டைநாடு சான்றோர் உடைத்து என்று தமிழகத்தின் சிறப்பைக் கூறிய புலவர் யார்?

A] வள்ளுவர்

B] கபிலர்

C] ஔவையார்

D] புகேழந்தி புலவர்

16) 'கூடல்' எனவும் 'ஆலவாய்' என வேறு பெயர்களால் அழைக்கப்படும் நகரம் எது?

A] திருச்சி

B] மதுரை

C] தருமபுரி

D] ஈரோடு

17) கீழ்க்கண்ட எந்த பெயரே பிற்காலத்தில் கூடல் என மருவியுள்ளதாக கூறப்படுகிறது?

A] நான்மாடக்கூடல்

B] நான்மாக்கூடல்

C] நான்குமாடக்கூடல்

D] மதுரைக்கூடல்

18) நான்மாடக்கூடல் என அழைக்கப்பட்ட நான்கு கோவில்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான கோவில் எது?

A] திருமுடங்கை

B] திருநள்ளாறு

C] திருவாலவாய்

D] திருவாரூர்

19) மதுரைக்கு காவலாக அமைந்துள்ளதாக கூறப்பட்டுள்ள கோவில்களில் கீழ்க்கண்டவற்றில் எந்த கோவில் மட்டும் தவறாக கூறப்பட்டுள்ளது?

A] கன்னிகோவில்

B] கரியக்கோவில்

C] காளிகோவில்

D] ஆலவாய்க் கோவில்

20) கீழ்க்கண்டவற்றில் யார் மதுரையை அழிக்க ஏழு மேகங்களை அனுப்பியதாக கூறப்படுகிறது?

A] இந்திரன்

B] திருமால்

C] வருணன்

D] வாயுதேவன்

21) மதுரையை அழிக்க வந்த நான்கு மேகங்களை பற்றி பாண்டிய மன்னன் இறைவனிடம் முறையிட, இறைவன் நான்கு மேகங்களை காக்க அனுப்பினார். அந்நான்கும் நான்கு மாடங்களாக கூடி மதுரையைக்

காத்தமையால் நான்மாடக்கூடல் என்னும் பெயர் ஏற்பட்ட்தாக கூறியவர் யார்?

A] திருநாவுக்கரசர்

B] மாணிக்கவாசகர்

C] சேக்கிழார்

D] பரஞ்சோதியார்

22) மதுரையானது எந்நாட்டவரும் எவ்வூரினரும் வந்துக்கூடும் வளமான நகர் என்பதனால்____என்னும் பெயர் பெற்றது என்பர்?

A] ஆலவாய்

B] கூடல்

C] நான்மாடக்கூடல்

D] மதுரை

23) மதுரையை விரிவுபடுத்த பாண்டிய மன்னன் கேட்டதால் இறைவனின் கையணியாகிய பாம்பானது தன் உடலை வளைத்து மதுரையின் எல்லையை வரையறுத்ததால் அன்றுமுதல் மதுரைக்கு ஆலவாய் என பெயர் பெற்றதாக கூறும் செய்தியானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] திருவிளையாடற்புராணம்

B] திருத்தொண்டத்தொகை

C] மதுரைக்கலம்பகம்

D] பெரியபுராணம்

24) பழங்கால கல்வெட்டில் மதுரை என்னும் பெயரானது கீழ்க்கண்ட எந்த பெயராக காணப்படுகிறது?

A] மருதை

B] மரதை

C] மதிரை

D] மதுரை

25) மருத மரங்கள் அடர்ந்த பகுதியாக இருந்தமையால்____என வழங்கிய இடம், காலபோக்கில் மதுரை என்றாகியதாம்?

A] மத்ரை

B] மதிரை

C] மறதை

D] மருதை

26) சங்ககால மதுரையானது கீழ்க்கண்ட எந்த ஆற்றின் கரையில் அமைந்து இருந்ததாக கூறப்படுகிறது?

A] காவிரி

B] வைகை

C] செய்யாறு

D] பாலாறு

27) பொருத்துக:

1) அறுவை வீதி - அந்தணர் வீதி;

2) கூல வீதி - ஆடைகள் விற்கும் வீதி;

3) மறையவர் வீதி - தானியக்கடை வீதி;

4) பொன் வீதி - பொற்கடை வீதி;

A] 2 3 1 4

B] 1 2 4 3

C] 4 1 3 2

D] 3 4 2 1

28) சிவபெருமான் அவர்கள் கீழ்க்கண்ட எந்த பாண்டிய மன்னனாக தோன்றி மதுரையை ஆண்டார் என்று கூறப்படுகிறது?

A] பராக்கிரம பாண்டியன்

B] விக்கிரம பாண்டியன்

C] சுந்தர பாண்டியன்

D] சடையவர்ம பாண்டியன்

29) மதுரை நகரின் செவ்வேள் ஆனது கீழ்க்கண்ட யாராக தோன்றி மதுரையை ஆண்டதாக கூறப்படுகிறது?

A] நெல்வேலி மாறன்

B] பராக்கிரம குலசேகரன்

C] வரகுணராம பாண்டியன்

D] உக்கிரகுமாரப் பாண்டியன்

30) உமையம்மை ஆனவள் மலையத்துவனுக்கு மகளாகத் தோன்றி கீழ்க்கண்ட யாராக தோன்றி மதுரையை ஆண்டதாக அறியப்படுகிறது?

A] கோப்பெருந்தேவி

B] தடாதகைப் பிராட்டி

C] மங்கையர்க்கரசி

D] குலச்சிறையார்

31) அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக திகழந்த புலவர் யார்?

A] மாணிக்கவாசகர்

B] சேக்கிழார்

C] பரஞ்சோதி

D] சுந்தரர்

32) திருஞானசம்பந்தர் அவர்கள் கீழ்க்கண்ட எந்த பாண்டிய மன்னன் காலத்தில் மதுரையில் மங்கையர்க்கரசி, குலச்சிறையார் உதவியுடன் சைவைத்தைக் காத்தார்?

A] பராக்கிரம குலசேகரன்

B] வரகுணராம பாண்டியன்

C] கூன்பாண்டியன்

D] சடையவர்ம பாண்டியன்

33) மதுரையை தலநகரமாக கொண்டு நற்காவலர்களாகவும், சிறந்த பாவலர்களாகவும் இருந்து திகழ்ந்த பாண்டிய மன்னர்களில் கீழ்க்கண்டவரற்றில் யார் மட்டும் தவறானவர்?

A] ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன்

B] வரகுண பாண்டியன்

C] அதிவீரராம பாண்டியன்

D] பராக்கிரம குலசேகரன்

34) கீழ்க்கண்ட எந்த நாயக்கர் மன்னர் கலைநயத்தில் 'தாஜ்மகாலை' யொத்த திருமலை நாயக்கர் மகாலை அமைத்து மதுரையை அழகுப்படுத்தினார்?

A] விசுவநாத நாயக்கர்

B] திருமலை நாயக்கர்

C] சொக்கநாத நாயக்கர்

D] வீரப்ப நாயக்கர்

35) 'தமுக்கம்' மண்டபானது கீழ்க்கண்ட எந்த காலத்தின் விடுதியாக நாயக்கர் மன்னரால் கட்டப்பட்டது?

A] கோடைகால விடுதி

B] குளிர்கால விடுதி

C] வசந்தகால விடுதி

D] கார்கால விடுதி

36) சித்திரைத் திருவிழாவை செந்தமிழ்நாட்டு மக்களேயின்றிப் பன்னாட்டினரும் பார்த்து மகிழுமாறு சிறப்புற நடைபெறச் செய்த மன்னர் யார்?

A] விஜயரங்க சொக்கநாத நாயக்கர்

B] அரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர்

C] இரண்டாம் முத்துவீரப்ப நாயக்கர்

D] திருமலை நாயக்கர்

37) மதுரை மாநகரை விழா நிறைந்த நகரமாகவும், கலைமலிந்த கலைநகராக்கிக் கண்டு களிக்குமாறும் செய்த நாயக்க மன்னர் யார்?

A] திருமலை நாயக்கர்

B] சொக்கநாத நாயக்கர்

C] வீரப்ப நாயக்கர்

D] விசுவநாத நாயக்கர்

38) அக்காலத்தில் கீழ்க்கண்ட யார் அமைத்த சத்திரங்களும் சாலைகளும் மதுரைக்கு பெருமை சேர்ப்பனவாக இன்றும் திகழ்கின்றன?

A] விசுவாத நாயக்கர்

B] விஜயரங்க சொக்கநாத நாயக்கர்

C] இராணி மங்கம்மாள்

D] திருமலை நாயக்கர்

39) கீழ்க்கண்ட எந்த வள்ளல் மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவித் தமிழ் வளர்த்தார்?

A] பரிதிமாற்கலைஞர்

B] பாண்டித்துரையார்

C] மருதுபாண்டியர்

D] முத்துராமலிங்கனார்

40) மதுரையில் சிலப்பதிகாரக் காப்பியத் தலைவன் கோவலன் கொலைக்களப்பட்ட இடம்____எனும் பெயருடன் இன்றும் அப்பகுதி மக்களால் வழங்கப்படுகிறது?

A] கோவலன் பட்டலம்

B] கோவலன் பொட்டல்

C] கோவலன் சமாதி

D] கோவலன் மரணக்களம்

41) மதுரையில் பழங்கால மதிலின் எஞ்சிய சிறுபகுதியானது மேலவெளி வீதியில் கீழ்க்கண்ட எந்த அலுவலமாக தற்போது இயங்கிவருகிறது?

A] மாநகராட்சி தென்மண்டல அலுவலகம்

B] மாநகராட்சி ஆட்சியர் அலுவலகம்

C] மாநகராசட்சி வியாபாரிகள் சங்க அலுவலகம்

D] மாநகராட்சி வட்டாட்சியர் அலுவலகம்

42) மதுரையில் கையிற் சிலம்புடன் உட்கார்ந்து இருக்கும் உருவச்சிலை அமைந்த கோவிலானது கீழ்க்கண்ட எந்த பெயர் கோவிலாக இன்றும் மக்களால் வழிபடப்படுகிறது?

A] மீனாட்சியம்மன் கோவில்

B] இராணிமங்கம்மாள் கோவில்

C] கண்ணகியின் கோவில்

D] செல்லத்தம்மன் கோவில்

43) கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கீழ்க்கண்ட எந்த நூலில் மதுரை மூதூர் என குறிப்பிடுவதானால் மதுரையின் பழைமையானது பெறப்படுகிறது?

A] சீவகசிந்தாமணி

B] சிலப்பதிகாரம்

C] சிறுபாணாற்றுப்படை

D] மதுரைக்காஞ்சி

44) கீழ்க்கண்டவற்றில் மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களுள் பழைமையானது எது?

A] தெற்கு கோபுரம்

B] மேற்கு கோபுரம்

C] கிழக்கு கோபுரம்

D] வடக்கு கோபுரம்

45) கீழ்க்கண்டவற்றில் மீனாட்சியம்மன் கோவிலின் நான்கு கோபுரங்களில் உயரமான கோபுரம் எது?

A] தெற்கு கோபுரம்

B] வடக்கு கோபுரம்

C] மேற்கு கோபுரம்

D] கிழக்கு கோபுரம்

46) மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் தெற்கு கோபுரமானது கீழ்க்கண்ட எத்தனை அடி உயரமும், எத்தனை சுதை உருவங்களும் கொண்டதாக அமைந்துள்ளது?

A] 160.7 அடி; 1510 சுதை உருவங்கள்

B] 160.9 அடி; 1511 சுதை உருவங்கள்

C] 161.9 அடி; 1511 சுதை உருவங்கள்

D] 161.5 அடி; 1509 சுதை உருவங்கள்

47) நாயக்கர் மகாலானது கீழ்க்கண்டவற்றில் எதை மட்டும் பயன்படுத்தாமல் கட்டப்பட்டுள்ளது?

A] செங்கல்

B] மணல்

C] கற்கள்

D] மரம்

48) நாயக்கர் மகாலின் ஒவ்வொரு தூணும் கீழ்க்கண்ட எத்தனை அடி உயரமும் எத்தனை அடி சுற்றளவும் கொண்டதாக அமைந்துள்ளது?

A] 81 அடி உயரம்; 20 அடி சுற்றளவு

B] 80 அடி உயரம்; 18 அடி சுற்றளவு

C] 82 அடி உயரம்; 19 அடி சுற்றளவு

D] 84 அடி உயரம்; 16 அடி சுற்றளவு

49) மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றியவர் யார்?

A] குமரகுருபரர்

B] மகாவித்வான் மீனாட்சிசுந்தரனார்

C] மீனாட்சி

D] இராமச்சந்திர கவிராயர்

50) 'ஓங்குசீர் மதுரை', 'மதுரை மூதூர் மாநகர்', 'தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை', 'மாண்புடை மரபின் மதுரை', 'வானவர் உறையும் மதுரை', 'பதியெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்' - எனப் பற்பல அடைமொழிகளால் மதுரை மாநகருக்கு புகழாரம் சூட்டியுள்ள நூல் எது?

A] புறநானூறு

B] சிலப்பதிகாரம்

C] சிறுபாணாற்றுப்படை

D] திருவிளையாடற்புராணம்

## விடைகள் - தூங்கா நகர்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 11 | B | 21 | D | 31 | A | 41 | A |
| 2 | A | 12 | A | 22 | B | 32 | C | 42 | D |
| 3 | C | 13 | C | 23 | A | 33 | D | 43 | B |
| 4 | B | 14 | D | 24 | C | 34 | B | 44 | C |
| 5 | C | 15 | C | 25 | D | 35 | A | 45 | A |
| 6 | A | 16 | B | 26 | B | 36 | D | 46 | B |
| 7 | D | 17 | A | 27 | A | 37 | A | 47 | D |
| 8 | B | 18 | D | 28 | C | 38 | C | 48 | C |
| 9 | C | 19 | B | 29 | D | 39 | B | 49 | A |
| 10 | D | 20 | C | 30 | B | 40 | C | 50 | B |

## 10) அறிவு நுட்பம்

1) அறிவு நுட்பம் - என்ற சிறுகதையானது கீழ்க்கண்ட எந்த நூலில் அமைந்துள்ளது?

A] மரியாதைராமன் கதைகள்

B] கிராமியக் கதைகள்

C] நாட்டுப்புற கதைகள்

D] டென் லிட்டில் பிங்கர்ஸ்

2) கிராமியக் கதைகள் என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?

A] ஓவியர் ராம்கி

B] விந்தன்

C] க.இராமசாமி

D] குன்றக்குடி அடிகள்

3) 'இந்தியாவுக்கு விடுதலை கிடைத்தால், நாட்டைத் திறமையாக ஆட்சிபுரியும் தகுதி இந்தியருக்கு இருக்கிறதா என்பது ஐயமே' - என்று இந்தியர்களை பார்த்து கருத்து கூறியவர் யார்?

A] முசோலினி

B] வின்சன்ட் சர்ச்சில்

C] ஹிட்லர்

D] அட்லி

4) ஜெர்மனியின் கொடுங்கோலரான ஹிட்லருக்கு எதிராக திறமையாக வாதாடி எழுத்து மூலமாக ஹிட்லரை மன்னிப்பு கேட்க செய்த இந்தியர் யார்?

A] இராஷ் பிகாரி போஷ்

B] வ.உ.சிதம்பரனார்

C] சுபாஷ் சந்திர போஷ்

D] செண்பகராமன்

5) பெற்ற தாயும் பிறந்த நாட்டையும் மதிக்கக் கற்றுக்கொள்ளாதவன் கற்றும்_______ஆகவே கருதப்படுவான்?

A] பதர்

B] புதர்

C] சுடர்

D] இருள்

6) 'சிங்கங்களே! எழுந்து வாருங்கள். நீங்கள் செம்மறி ஆடுகள் என்ற மயக்கத்தை உதறித்தள்ளுங்கள்' - என்று இளைஞர்களை நோக்கி வீரமுழக்கமிட்டவர் யார்?

A] ஜவஹர்லால் நேரு

B] இராதாகிருஷ்ணன்

C] விவேகானந்தர்

D] மகாத்மா காந்தி

7) மதுரையைப் புகழ்ந்து பாடிய எட்டுத்தொகை நூல் எது?

A] பதிற்றுப்பத்து

B] பரிபாடல்

C] கலித்தொகை

D] புறநானூறு

விடைகள் - அறிவு நுட்பம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | A | 3 | C | 4 | D | 5 | A |
| 6 | C | 7 | D | | | | | | |

## 11) நெசவு

1) 'கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்; கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்' - என்று பாடியவர் புலவர் யார்?

A] நாமக்கல் இராமலிங்கனார்

B] கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

C] பாவேந்தர் பாரதிதாசன்

D] உவமைக்கவிஞர் சுரதா

2) பூக்களில் சிறந்த பூ பருத்திப்பூ என்று சற்றும் தயங்காமல் தெரிவித்த கவிஞர் யார்?

A] திரு.வி.க

B] முடியரசன்

C] சுரதா

D] வாணிதாசன்

3) பருத்தி ஆடை நெய்த பின்னர் செய்யப்படும் வேலைகளில் கீழ்க்கண்டவற்றில் தவறான ஒன்று மட்டும் எது?

A] பூ வேலைப்பாடுகள் செய்தல்

B] பளபளப்பாக்கல்

C] கரைப்படுத்தல்

D] வண்ணமேற்றல்

4) நெசவு வகைகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] தறி நெசவு

B] மேல்நோக்கு நெசவு

C] கீழ்நோக்கு நெசவு

D] கை நெசவு

5) பாவுநூல், ஊடைநூல் இணைந்து_____என்னும் ஆடை உருவாகிறது?

A] கலிங்கம்

B] சில்க்

C] பளபளப்பு

D] பட்டு

6) பொருத்துக:

1) திருப்பூர் - பட்டாடைகள்; 2) மதுரை - கண்டாங்கி சேலைகள்;

3) உறையூர் - பின்னலாடைகள்; 4) காஞ்சி - சுங்குடிப்புடவைகள்;

A] 2 1 3 4

B] 3 4 2 1

C] 1 3 4 2

D] 4 2 1 3

7) உலகிலேயே கைத்தறி நெசவின் முன்னோடியாக திகழும் இந்திய மாநிலம் எது?

A] குஜராத்

B] கேரளா

C] தமிழகம்

D] மேற்குவங்கம்

8) கைத்தறி, கதர் ஆடைகளின் சிறப்பை உணர்ந்து அதை அணிந்த பகுத்தறிவு பெரியவர்கள் கீழ்க்கண்டவற்றில் யார் மட்டும் தவறானவர்?

A] மூதறிஞர் இராஜாஜி

B] அண்ணல் காந்தியடிகள்

C] பெருந்தலைவர் காமராசர்

D] தந்தை பெரியார்

விடைகள் - நெசவு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | B | 2 | A | 3 | C | 4 | D | 5 | A |
| 6 | B | 7 | C | 8 | A | | | | |

## 12) நிலைத்த செல்வம் கல்வி செல்வம்

1) ‘நிலைத்த செல்வம் கல்விச் செல்வம்’ - என்ற சிறுகதை பகுதியானது கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] பன்பை வளர்க்கும் பண்பாட்டுக் கதைகள்

B] மரியாதை இராமன் கதைகள்

C] பன்பை வளர்க்கும் கல்வி கதைகள்

D] கிராமத்துக் கதைகள்

2) பண்பை வளர்க்கும் பண்பாட்டு கதைகள் என்ற நூலை எழுதிய ஆசிரியர் யார்?

A] த.ந.ஜஸ்வர்ஷினி

B] பி.எம்.முத்து

C] ராம்கி

D] ராமநாதன்

3) நம் வாழ்வில் நாள்தோறும் எதிர்கொள்ளும் சூழல்களுக்குப் பல்வேறு கோணங்களில் இருந்து தீர்வு காண_____உதவுகிறது?

A] செயலாற்றல்

B] கல்வியாற்றல்

C] படைப்பாற்றல்

D] திறனாற்றல்

4) கீழ்க்கண்ட எந்த மன்னர் வேள்விக்காக ஆடுகளை பலியிடும் போது உயிர்களை பலியிட வேண்டாம் என்று கௌதம் புத்தர் கூறினார்?

A] பிந்துசாரர்

B] அசோகர்

C] சந்திரகுப்தர்

D] பிம்பிசாரர்

5) நிலைத்த செல்வம்___செல்வம் என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] செல்வம்

B] கல்வி

C] வீரம்

D] புகழ்

விடைகள் - நிலைத்த செல்வம் கல்வி செல்வம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | B | 3 | C | 4 | D | 5 | B |

## 13) இயற்கை வேளாண்மை

1) வேளாண்மை பல்கலைக்கழகமானது கீழ்க்கண்ட எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

A] கோவை

B] சென்னை

C] திருச்சி

D] மதுரை

2) தற்போது வேளாண்மைத் துறையில் கீழ்க்கண்ட எந்த வேளாணமைக்கு எனத் தனிப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது?

A] செயற்கை வேளாண்மை

B] தன்னிச்சை வேளாண்மை

C] இயற்கை வேளாண்மை

D] நீர்நிலை வேளாண்மை

3) வேளாண்மைக் கூறுகள் மொத்தம் எத்தனை வகைப்படுகின்றன?

A] 5

B] 6

C] 4

D] 7

4) கீழ்க்கண்டவற்றில் சரியான வரிசையைக் கூறுக?

A] களை எடுத்தல் - நீர் பாய்ச்சுதல் - உழுதல் - காத்தல் - தொழு உரமிடுதல் - விதைத்தல்

B] நீர் பாய்ச்சுதல் - காத்தல் - விதைத்தல் - களை எடுத்தல் - உழுதல் - தொழு உரமிடுதல்

C] விதைத்தல் - நீர் பாய்ச்சுதல் - தொழு உரமிடுதல் - உழுதல் - காத்தல் - களை எடுத்தல்

D] உழுதல் - விதைத்தல் - தொழு உரமிடுதல் - நீர் பாய்ச்சுதல் - களை எடுத்தல் - காத்தல்

5) ஒருபலம் எடையுள்ள மண்ணை கீழ்க்கண்ட எத்தனை எடை அளவிற்கு உலரும்வரை உழுதிடுதல் வேண்டும்?

A] அரைபலம்

B] கால்பலம்

C] ஒருபலம்

D] முக்காபலம்

6) 'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்' - எனத் தொடங்கும் குறள் மூலம் வள்ளுவர் கீழ்க்கண்டவற்றில் எவற்றை விளக்குகிறார்?

A] விதைத்தல்

B] நீர் பாய்ச்சுதல்

C] உழுதல்

D] களை எடுத்தல்

7) கீழ்க்கண்ட எந்த பகுதியை வேளாண் மக்கள் 'வானம் பார்த்த பூமி' என்று கூறுகிறார்கள்?

A] புன்செய் நிலம்

B] தரிசு நிலம்

C] உழவு நிலம்

D] நன்செய் நிலம்

8) புன்செய் நிலத்தில் விளையும் பயிர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] கேழ்வரகு

B] காராமணி

C] துவரை

D] வாழை

9) வேளாண் மக்கள் விதைகளை பயன்படுத்த விதை நெல்லை முதலில் நாற்றங்காலில் விதைத்து கீழ்க்கண்ட எத்தனை நாள் முதல் எத்தனை நாள் வரை வளர்ப்பர்?

A] 22 நாள் முதல் 26 நாள் வரை

B] 21 நாள் முதல் 25 நாள் வரை

C] 24 நாள் முதல் 28 நாள் வரை

D] 23 நாள் முதல் 27 நாள் வரை

10) பொருத்துக:

1) நெல்லுக்கு - வண்டியோட;
2) கரும்புக்கு - தேரோட;

3) வாழைக்கு - நண்டோட;
4) தென்னைக்கு - ஏரோட;

A] 2 3 4 1

B] 1 2 3 4

C] 3 4 1 2

D] 4 1 2 3

11) இலை தழைகள், ஆட்டு எரு, மாட்டு எரு, கடலைப் பிண்ணாக்கு, வேப்பம் பிண்ணாக்கு, இலுப்பம் பிண்ணாக்கு - ஆகியவை கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக அழைக்கப்படுகின்றன?

A] தொழு உரங்கள்

B] வேளாண் உரங்கள்

C] செயற்கை உரங்கள்

D] மண் உரங்கள்

12) செயற்கை உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை பயிர்களுக்கு பயன்படுத்தாமல் உணவு உற்பத்தி செய்யும் முறைக்கு_______என்று பெயர்?

A] உரமிடுதல் வேளாண்மை

B] செயற்கை வேளாண்மை

C] செயற்கை உரமற்ற வேளாண்மை

D] அங்கக வேளாண்மை

13) கீழ்க்கண்டவற்றில் சரியான வரிசையை கூறுக?

A] கோமயம் - சாணம் - பால் - தயிர் - நெய்

B] பால் - தயிர் - கோமயம் - நெய் - சாணம்

C] தயிர் - நெய் - பால் - சாணம் - கோமயம்

D] நெய் - சாணம் - தயிர் - கோமயம் - பால்

14) கோமயம், சாணம், பால், தயிர், நெய் ஆகிய ஐந்தும் கீழ்க்கண்டவற்றில் எவ்வாறாக அழைக்கப்படுகின்றன?

A] பஞ்சபூதங்கள்

B] பஞ்சவர்ணம்

C] பஞ்சகவ்வியம்

D] பஞ்ச உணவுகள்

15) பயிரில் இடையில் வளரும் வேண்டாத புல் பூண்டுகள் நீக்குவதை____என்று அழைப்பர்?

A] உரமிடுதல்

B] களையெடுத்தல்

C] நீக்குதல்

D] உழுதல்

16) 'ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்' - எனத் தொடங்கும் குறள் மூலம் வள்ளுவர் கீழ்க்கண்ட எந்த நிகழ்ச்சியை விளக்குகிறார்?

A] களையெடுத்தல்

B] தொழு உரமிடுதல்

C] நீர் பாய்ச்சுதல்

D] விதைத்தல்

17) கேட்காத கடனும் பார்க்காத பயிரும்_____ஆகும்

A] பால்

B] பாள்

C] பாய்

D] பாழ்

18) சென்னையில் ஒரு பள்ளியில் ஆசிரியரான வேமூர் நரசிம்மர் ஏழை மாணவர்களுக்கு நண்பகல் இலவச உணவு வழங்கும் திட்டத்தை செயல்படுத்த கீழ்க்கண்ட யாரிடம் பொருளுதவிபெற அணுகினார்?

A] வழக்கறிஞர் இராஜாஜி

B] மருத்துவ மாமேதை குருசாமி

C] பக்தவச்சலம்

D] சுப்ரமணியனார்

19) 'தமிழின்பம்' - என்ற நூலை எழுதியவர் யார்?

A] பரிதிமாற்கலைஞர்

B] பாரதிதாசன்

C] ரா.பி.சேதுபிள்ளை

D] நாமக்கல் கவிஞர்

20) கழார் பெருந்துறை என்னும் ஊறானது கீழ்க்கண்ட எந்த நகரத்திற்கு அருகே அமைந்துள்ளது?

A] புகார் நகரம்

B] காவேரிபூம்பட்டினம்

C] உறையூர் நகரம்

D] பூம்புகார் நகரம்

21) கழார் பெருந்துறை எனப்படும் துறையனது ஆற்றுப்புனல் மோதி மோதிக் கரைகளை அழிப்பினும், அழிவறாமல் வானுற வளர்ந்த கீழ்க்கண்ட எந்த மரங்கள் நிறைந்து காணப்படுகிறது என்று கவிஞர் கூறுகிறார்?

A] மருத மரங்கள்

B] அரச மரங்கள்

C] வேம்பு மரங்கள்

D] புளிய மரங்கள்

22) கழார் பெருந்துறை என்னும் துறையில் புனல் ஆடி புகழ் சேர்த்த மன்னன் யார்?

A] அரிமர்த்தினன்

B] கரிகாலன்

C] செங்குட்டுவன்

D] ஆட்டனத்தி

23) ‘சங்கத்தமிழ் புலவர் வரிசை’ - என்ற நூலை எழுதியவர் யார்?

A] இராபி.சேதுபிள்ளை

B] கா.கோவிந்தன்

C] இரா.மீனாட்சி

D] சி.சு.செல்லப்பா

விடைகள் - இயற்கை வேளாண்மை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 6 | C | 11 | A | 16 | A | 21 | A |
| 2 | C | 7 | A | 12 | D | 17 | D | 22 | D |
| 3 | B | 8 | D | 13 | A | 18 | B | 23 | B |
| 4 | D | 9 | B | 14 | C | 19 | C | | |
| 5 | B | 10 | C | 15 | B | 20 | B | | |

14) தூரத்து ஒளி - அக்பர் பீர்பால் கதைகள் என்ற நூலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறுகதை - எழுதியவர் க.கௌ.முத்தழகர்

## 15) தமிழக விளையாட்டுகள்

1) கீழ்க்கண்டவற்றில் எது ஒரு இனத்தின் வீரத்தையும் பண்பையும் வெளிப்படுத்துகிறது?

A] படிப்பு

B] செல்வம்

C] விளையாட்டு

D] நன்னடத்தை

2) உடல்திறன் வளர்க்க, உள்ளத்தில் ஆர்வத்தை ஏற்படுத்த, மனம் மகிழ்ச்சியில் திளைக்க கீழ்க்கண்டவற்றில் எது துணைபுரிகின்றன?

A] விளையாட்டு

B] பெருஞ்செல்வம்

C] உடற்பயிற்சி

D] இயற்கையை ரசிப்பது

3) விளையாட்டின் அடிப்படை நோக்கம் யாது?

A] முயற்சி செய்தல்

B] வெற்றி கொள்ளல்

C] கலந்து கொள்ளல்

D] போட்டியிடுதல்

4) உடலிலும் உள்ளத்திலும் உள்ள ஆற்றல்களை வெளியிடவும், எதிர்பாராத

தோல்விகளை எதிர்கொள்ளவும் மனப்பான்மை மேம்படவும் கீழ்க்கண்டவற்றில் எவை உதவுவதாக ஆசிரியர் கூறுகிறார்?

A] உடற்பயிற்சி

B] விளையாட்டு

C] நடைபயிற்சி

D] புத்தகம் படித்தல்

5) கீழ்க்கண்டவற்றில் எவற்றின் வழியால் பட்டறிவும், போராட்டத்திற்கு விடை காணும் திறனும் மக்களால் பெறமுடிகிறது?

A] புத்தகம் வாசித்தல்

B] உடற்பயிற்சி செய்வது

C] விளையாட்டு

D] மற்றவர்களுக்கு கற்பித்தல்

6) சிற்றூர் சிறுவர்கள் விளையாடும் விளையாட்டில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] தட்டாங்கல்

B] கிளித்தட்டு

C] பந்துவிளையாட்டு

D] ஒற்றையா இரட்டையா

7) சிற்றூர் சிறுமியர் விளையாடும் விளையாட்டுகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] பூப்பறித்தல்

B] பல்லாங்குழி

C] கரகரவண்டி

D] கள்ளன் கள்ளி

8) பழைமை வாய்ந்த ஆடவர் ஆடிய விளையாட்டுகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] வேட்டையாடுதல்

B] உப்பு விளையாட்டு

C] ஏறுதழுவுதல்

D] நீரில் மூழ்கி மணல் எடுத்தல்

9) முற்காலத்தில் மற்போரில் வல்ல மல்லர்கள் கீழ்க்கண்ட யாரால் மதிக்கப்பட்டனர்?

A] அமைச்சர்கள்

B] புலவர்கள்

C] மன்னர்கள்

D] மக்களால்

10) களத்தில் பல்லாயிரவர் சூழ்ந்து நிற்க, தருக்கும் செருக்கும் நிரம்பிய ஆமூர் மல்லனுக்கும் வீரமும் தீரமும் வாய்ந்த நற்கிள்ளிக்கும் இடையே நடைபெற்ற வீர விளையாட்டை கீழ்க்கண்ட எந்த சங்க இலக்கிய நூல் வர்ணிக்கின்றது?

A] குறுந்தொகை

B] புறநானூறு

C] கலித்தொகை

D] பரிபாடல்

11) கீழ்க்கண்ட எந்த நிலத்தில் ஏறுதழுவுதல் என்னும் வீரவிளையாட்டு நடைபெற்றது?

A] நெய்தல்

B] குறிஞ்சி

C] மருதல்

D] முல்லை

12) கொழுமைமிக்க காளைகளின் தெம்பானது காளையின் கீழ்க்கண்ட எந்த பாகத்தில் இருக்கிறது என்று முற்காலத்து வீரர்கள் அறிந்து அதை அடக்கினர்?

A] வாய்

B] கொம்பு

C] வால்

D] மூக்கு

13) ஏறுதழுவிலின் போது காளையின் எந்த பாகத்தை பிடித்தல் தாழ்வு என்பது தமிழர்களின் கொள்கையாக இருந்தது?

A] மூக்கு

B] வாய்

C] வால்

D] கொம்பு

14) அரங்கு இழைத்து (கட்டம் வரைந்து) நெல்லிக்காய்களை வைத்து நகர்த்தி ஆடும் ஆட்டம்_____எனப்படும்?

A] வட்டாடுதல்

B] ஓரையடுதல்

C] பந்தாடுதல்

D] ஊஞ்சலாடுதல்

15) மகளிர் நண்டு, ஆமை ஆகியவற்றைக் கோல்கொண்டு அலைத்து ஆடுவது_____எனப்படும்?

A] பந்தாடுதல்

B] கழங்காடுதல்

C] வட்டாடுதல்

D] ஓரையாடுதல்

16) தமுக்கம் மைதானமானது கீழ்க்கண்ட எந்தப் போரை காண்பதற்கான திடலாகும்?

A] குதிரைப்போர்

B] யானைப்போர்

C] சேவற்போர்

D] காடைப்போர்

17) சோழநாட்டின் கீழ்க்கண்ட எந்த தலைநகரம் பழங்காலத்தில் கோழியூர் என சிறப்பு பெயர் கொண்டு அமைந்திருந்தது?

A] பூம்புகார்

B] புகார்

C] உறையூர்

D] மதுரை

18) பழைய ஏறுதழுவுதல் விளையாட்டானது தற்போது கீழ்க்கண்ட எந்த விளையாட்டாக அறியப்படுகின்றன?

A] சிலம்பாட்டம்

B] உறியடித்தல்

C] வழுக்குமரம் ஏறுதல்

D] மஞ்சுவிரட்டல்

19) தமிழரின் தற்காப்புக்கலை விளையாட்டுகளில் ஒன்றாக கீழ்க்கண்ட எந்த விளையாட்டு சிறந்து வளர்ந்து வருகிறது?

A] சிலம்பாட்டம்

B] கோலாட்டம்

C] மற்போர் செய்தல்

D] கத்திச்சண்டை

20) உலக அரங்கில் தமிழரின் வீர விளையாட்டான எந்த ஆட்டத்திற்கு தனியிடம் கிடைத்துள்ளது?

A] மஞ்சுவிரட்டு

B] சிலம்பாட்டம்

C] சடுகுடு

D] மற்போர்

21) நம் சமுதாயத்தின் நாகரிகத்தையும் மரபையும் பண்பாட்டையும் கீழ்க்கண்டவற்றில் எது விளக்கவல்லது என்று ஆசிரியர் கூறுகிறார்?

A] படிப்பறிவு

B] விளையாட்டு

C] நன்னடத்தை

D] நல்லொழுக்கம்

22) பொருத்துக:

1) ஆடவர் - ஓரையாடுதல்;

2) மகளிர் - பூப்பறித்தல்;

3) சிறுவர் - ஏறுதழுவுதல்;

4) சிறுமியர் - கிட்டிப்புள்;

A] 4 2 3 1

B] 1 4 2 3

C] 2 3 1 4

D] 3 1 4 2

விடைகள் - தமிழக விளையாட்டுகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | C | 6 | A | 11 | D | 16 | B | 21 | B |
| 2 | A | 7 | D | 12 | B | 17 | C | 22 | D |
| 3 | D | 8 | B | 13 | C | 18 | D | | |
| 4 | B | 9 | C | 14 | A | 19 | A | | |
| 5 | C | 10 | B | 15 | D | 20 | C | | |

## 16) நண்பன்

1) நண்பன் - என்னும் சிறுகதையானது கீழ்க்கண்ட எந்த நூலிருந்து எடுக்கப்பட்டுள்ளது?

A] மரியாதைராமன் கதைகள்

B] நாட்டுபுறக்கதைகள்

C] அறிவுச்சார்ந்த கதைகள்

D] இலக்கியக்கதைகள்

2) மரியாதைராமன் கதைகள் - என்னும் நூலை எழுதியவர் யார்?

A] க.ந.சம்மந்தன்

B] சி.சு.செல்லப்பா

C] ஓவியர்.ராம்கி

D] விசாலாட்சி

3) 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர் - என்று பாடிய கவிஞர் யார்?

A] நாமக்கல் கவிஞர்

B] பாரதிதாசன்

C] திரு.வி.க

D] பாரதியார்

4) மனிதன், தான் பெற்ற அனுபவங்களைப் பிறர்க்கு எடுத்துரைக்கவும், பிறர் பெற்ற அனுபவங்களைத் தன் அறிவதற்கும் கருவியாக விளங்குவது எது?

A] கல்வி

B] மொழி

C] இசை

D] எழுத்து

5) மனிதன் நாகரிகம் அடைவதற்கு கீழ்க்கண்டவற்றில் எது முதற் கருவியாக விளங்கியது?

A] பொருள்

B] கல்வி

C] மொழி

D] இசை

6) கீழ்க்கண்டவற்றில் யார் 'வலக்கை தருவது இடக்கைக்குத் தெரியக் கூடாது' - என்பது முதுமொழிக்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர் என்று கூறப்படுகிறார்?

A] மு.வரதராசனார்

B] தந்தை பெரியார்

C] அறிஞர் அண்ணா

D] திரு.வி.கலியாணசுந்தரனார்

7) இயலாதோர்க்கு இரங்குவதும் உதவுவதும்_______ஆகும்?

A] பதவி

B] உதவி

C] இரக்கம்

D] பரிவு

8) 'இயல்வது கரவேல்; ஈவது விலக்கேல்' - என்று பாடிய புலவர் யார்?

A] பாரதியார்

B] ஔவையார்

C] வள்ளுவர்

D] வள்ளலார்

9) ரோம் நகருக்கு பொன்னாடை விற்றவன் தமிழன்; மானமே பெரிதென மதித்தான் தமிழன்; கப்பலோட்டினான் தமிழன்; எவ்வுயிரையும் தன்னுயிர் போல் காத்து வந்தான் தமிழன் - என்று தமிழனின் பெருமைகளை கூறிய கவிஞர் யார்?

A] திரு.வி.க

B] பாரதிதாசன்

C] அறிஞர் அண்ணா

D] முடியரசன்

10) 'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்' - என்ற ப்வரி இடம்பெற்றுள்ள தமிழ் என்னும் பிரிவானது பாரதியார் இயற்றிய கீழ்க்கண்ட எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A] சந்திரிகையின் கதை

B] ஞானப்பாடல்கள்

C] பல்வகைப்பாடல்கள்

D] தேசிய கீதங்கள்

விடைகள் - நண்பன்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | A | 2 | C | 3 | D | 4 | B | 5 | C |
| 6 | A | 7 | D | 8 | B | 9 | C | 10 | D |

## 17) ஓவியக்கலை

1) எல்லைகளையெல்லாம் கடந்து எங்கும் பரந்து வாழும் மக்கள் மனங்களைக் கொள்ளை கொண்டு வியக்க வைக்கும் விந்தை மொழி எது?

A] இசை

B] நாடகம்

C] கல்வி

D] ஓவியம்

2) தமிழ் வளர்த்த நுண்கலைகளின் வரிசையில் கீழ்க்கண்ட எந்த கலையானது முன்னனியில் இருக்கிறது?

A] பேச்சுக்கலை

B] ஓவியக்கலை

C] நாடகக்கலை

D] நடனக்கலை

3) பண்டையக் காலத்தில் தாம் தங்கிய மலைக்குகைகளிலும் பாறைகளிலும் கீழ்க்கண்ட எந்த ஓவியங்களை மக்கள் வரைந்தனர்?

A] கோட்டோவியங்கள்

B] சித்திரயோவியங்கள்

C] கண்ணாடியோவியங்கள்

D] குகையோவியங்கள்

4) தமிழகத்தில் மொத்தம் எத்தனை இடங்களில் குகை ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன?

A] 27

B] 21

C] 25

D] 23

5) பழங்காலத்தில் மக்கள் தாம் வரைந்த ஓவியங்களை கீழ்க்கண்டவாறு அழைத்தனர்?

A] சித்திரயெழுத்து

B] கண்ணெழுத்து

C] ஓவியயெழுத்து

D] கோட்டெழுத்து

6) தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் இருந்ததனைப் கீழ்க்கண்ட எந்த இரு நூலில் உள்ள செய்யுள் அடிகள் தெளிவுபடுத்துகின்றன?

A] பரிபாடல், குறுந்தொகை

B] கலித்தொகை, பரிபாடல்

C] புறநானூறு, அகநானூறு

D] ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து

7) சீன மொழியிலும் எழுத்துக்கள்____________உள்ளன?

A] கண்கள்

B] சித்திரம்

C] கோடுகள்

D] உருவங்கள்

8) பழங்கால மக்கள் கீழ்க்கண்ட எந்த எழுத்துக்களால் தம் கருத்துக்களைப் புலப்படுத்தினர்?

A] சித்திர எழுத்துக்கள்

B] கோட்டெழுத்துக்கள்

C] கண்ணெழுத்துக்கள்

D] சீன எழுத்துக்கள்

9) ஓவியம் வரைவதற்கு கூறப்பட்டுள்ள அடிப்படை கோடுகளில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] நேர்கோடு

B] சிறுகோடு

C] கோணக்கோடு

D] வளைகோடு

10) நேர்கோடு, வளைகோடு, கோணக்கோடு ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு வரையப்படும் ஓவியங்கள்____________எனப்படும்?

A] கேலிச்சித்திரம்

B] குகை ஓவியங்கள்

C] கோட்டோவியங்கள்

D] பூச்சு ஓவியங்கள்

11) கோட்டோவியங்களில் கீழ்க்கண்ட எந்த வண்ணம் மட்டும் பூசனால் அழகிய ஓவியமாக உருவெடுப்பதில்லை?

A] மஞ்சள்

B] சிவப்பு

C] கருப்பு

D] பச்சை

12) நடுகல் வணக்கம் - பற்றி குறிப்பிடும் நூல் எது?

A] தொல்காப்பியம்

B] திருக்குறள்

C] அகத்தியம்

D] சங்க இலக்கியம்

13) ஓவியக்கலைக்கு வழங்கப்பெறும் பல பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான பெயர் எது?

A] ஓவம்

B] வட்டிகைச் செய்தி

C] பட்டம்

D] படாம்

14) ஓவியக்கலைஞருக்கு வழங்கப்பெறும் சிறப்பு பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறானது எது?

A] கண்ணுள் வினைஞன்

B] கிள்ளிவல்லோன்

C] வித்தக வினைஞன்

D] ஓவியப்புலவன்

15) ஓவியர் எண்ணங்களின் எழுச்சியைப் பல வண்ணங்களின் துணைகொண்டு எழுதுவோராதலில் கீழ்க்கண்டவற்றில் யார் புகழப்பெற்றார்?

A] கிளவி வல்லோன்

B] சித்திரக்காரர்

C] வித்தக வினைஞன்

D] கண்ணுள் வினைஞர்

16) கீழ்க்கண்ட உரைநடை வேந்தர் தம் உரையில் ஓவியருக்கு, 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழில் நிறுத்துவோர்' - என இலக்கணம் வகுத்துள்ளார்?

A] அடியார்க்கு நல்லார்

B] நச்சினார்க்கினியார்

C] இளம்பூரனார்

D] சீத்தலைச்சாத்தனார்

17) ஓவிய நூலின் நுணுக்கத்தை நன்கு கற்றுப் புலமை பெற்ற ஆசிரியர்________எனப் போற்றப்பட்டார்?

A] ஓவியப் புலவன்

B] வித்தகர்

C] ஓவியர்

D] கண்ணுள் வினைஞன்

18) 'ஓவியச் செந்நூல் உரை நூற்கிடக்கையும் கற்றத்துறை போகப் பொற்றொடி மடந்தையாக இருந்தனள்' - என்று சிலம்பு கீழ்க்கண்டவற்றில் யாரை குறிப்பிடுகிறது?

A] கண்ணகி

B] கோப்பெருந்தேவி

C] மாதவி

D] மாதிரி

19) வண்ணந்தீட்டும் கோலின் வேறு பெயர்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான பெயர் யாது?

A] வட்டிகை

B] துகிலிகை

C] தூரிகை

D] வட்டிகைப் பலகை

20) வண்ணங்கள் குழப்பும் பலகைக்கு________எனப் பெயரிட்டிருந்தனர்?

A] தூரிகைப் பலகை

B] வட்டிகைப் பலகை

C] வட்டிகை

D] துகிலிகைப் பலகை

21) பழங்காலத்தில் ஓவியங்கள் வரையப்பட்ட இடங்களின் பெயர்களில் கீழ்க்கண்ட எந்த பெயர் மட்டும் தவறானது?

A] எழுதுநிலை மண்டபம்

B] எழுதெழில் அம்பலம்

C] சித்திரபாடம்

D] சித்திரக்கூடம்

22) பழங்காலத்தில் இறை நடனம் புரிவதற்கு என்று________ஒன்றனை ஏற்படுத்தியுள்ளனர்?

A] சித்திரச்சபை

B] சித்திரக்கூடம்

C] சித்திரமாடம்

D] சித்திரதாடம்

23) 'ஓவத்தனைய இடனுடை வனப்பு' - என்ற வரி இடம்பெற்றுள்ள நூல் எது?

A] சிலப்பதிகாரம்

B] குறுந்தொகை

C] அகநானூறு

D] புறநானூறு

24) 'ஓவத்தனைய இடனுடை வனப்பு' - என்னும் வரி மூலம் கீழ்க்கண்ட எவற்றின் அழகை ஓவியத்திற்கு ஒப்ப வைத்துக் கவிஞர் போற்றுகிறார்?

A] மாளிகையின் அழகை

B] வீட்டின் அழகை

C] இயற்கையின் அழகை

D] நாட்டின் அழகை

25) பழங்காலத்தில் சுடுமண் சுவர்மீது கீழ்க்கண்டவற்றுள் எவற்றை பூசிச் செஞ்சாந்துகொண்டு ஓவியங்கள் தீட்டினர்?

A] கல்சுதை

B] வண்ணச்சுதை

C] மண்சுதை

D] வெண்சுதை

26) கீழ்க்கண்ட எவற்றில் மட்டும் பழங்கால மக்கள் ஓவியம் எழுதவில்லை?

A] நூற்சீலை

B] திரைச்சீலை

C] துணிச்சீலை

D] மரப்பலகை

27) நாடகமேடைகளில் பல வண்ணங்களில் கவின்மிகு காட்சிகள் தீட்டப்பட்ட திரைச்சீலைகள் தொங்கினவற்றை கீழ்க்கண்டவற்றில் எவற்றைக் கொண்டு அறிகிறோம்?

A] ஓவிய அழினி

B] ஓவிய இழினி

C] ஓவிய எழினி

D] ஓவிய தழினி

28) வண்ணங்கலவாமல் கரித்துண்டுகளால் வடிவம் மட்டும் வரைவதனைப்________என்று அழைத்தனர்?

A] புனைய ஓவியம்

B] புனையா ஓவியம்

C] கோட்டோவியம்

D] குகை ஓவியம்

29) புனையா ஓவியமானது நடைமுறையில் கீழ்க்கண்ட எந்த கோட்டு ஓவியமாக இருப்பது குறிப்பிடத்தக்கது?

A] நேர்கோடு

B] வளைகோடு

C] கோணக்கோடு

D] மென்கோடு

30) ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும், விண்மீன்களையும் வரைந்த செய்தியானது கீழ்க்கண்ட எந்த சங்க நூல் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது?

A] நெடுநெல்வாடை

B] புறநானூறு

C] கலித்தொகை

D] சிலப்பதிகாரம்

31) மறைந்து கொண்டிருந்த ஓவியக்கலைக்கு மீண்டும் புத்துயிர் ஊட்டிய மன்னர்கள் யார்?

A] சோழர்கள்

B] பல்லவர்கள்

C] சேரர்கள்

D] பாண்டியர்கள்

32) கீழ்க்கண்ட எந்த பல்லவ மன்னன் காலத்தில் ஓவியக்கலையானது எழுச்சியுற்று உயர்நிலையை எட்டியது?

A] முதலாம் பராக்கிரமன்

B] முதலாம் நரசிம்மவர்மன்

C] முதலாம் மகேந்திரவர்மன்

D] முதலாம் நந்திவர்மன்

33) கல்வெட்டுகளானது கீழ்க்கண்டவற்றில் எந்த மன்னனை 'சித்திரகாரப்புலி' எனப் புகழ்கின்றன?

A] இரண்டாம் நரசிம்மவர்மன்

B] முதலாம் நந்திவர்மன்

C] முதலாம் நரசிம்மவர்மன்

D] முதலாம் மகேந்திரவர்மன்

34) தட்சிணசித்திரம் - என்னும் நூலுக்கு உரை எழுதிய பல்லவ மன்னன் யார்?

A] விசயலாய பல்லவ மன்னன்

B] முதலாம் மகேந்திரவர்மன்

C] இரண்டாம் மகேந்திரவர்மன்

D] முதலாம் நந்திவர்மன்

35) தட்சிணசித்திரம் - என்பது______நூலாகும்?

A] ஓவிய நூல்

B] நாடக நூல்

C] இலக்கண நூல்

D] உரைநடை நூல்

36) பல்லவர் கால ஓவியங்கள் காணப்படும் இடங்களில் கீழ்க்கண்டவற்றில் தவறான இடம் எது?

A] மாமல்லபுர குகைக் கோவில்

B] காஞ்சி கைலாசநாதர் கோவில்

C] திருநந்திக்கரை கோவில்

D] பனைமலை

37) கீழ்க்கண்ட எந்த இடத்தில் சேரர் கால ஓவியங்கள் கிடைத்துள்ளன என்று கூறப்படுகிறது?

A] புதுக்கோட்டை

B] பனைமலை

C] திருமலை

D] திருநந்திக்கரை

38) கீழ்க்கண்ட எந்த இடத்தில் காணப்படும் ஓவியங்கள், ஓவியக் கருவூலங்களாக வைத்துப் போற்றத்தகுந்தன?

A] புதுக்கோட்டை சித்தன்வாசல்

B] மாமல்லபுர குகைக் கோவில்

C] திருநந்திக்கரைக் கோவில்

D] மாமண்டூர் கோவில்

39) சித்தன்வாசல் என்னும் குகைக்கோவிலில் காணபட்டும் ஓவியங்களை கீழ்க்கண்ட எந்த ஓவிய ஆசிரியர் வரைந்தார் என்று கூறப்படுகிறது?

A] கௌதம மன்னன்

B] இராமச்சந்திரன்

C] இளம்கௌதமன்

D] இராமநாதன்

40) சித்தன்வாசல் என்னும் குகைக்கோவிலில் காணபட்டும் ஓவியங்களை வரைந்த இளம்கௌதமன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த நகரை சேர்ந்த ஓவியர் ஆவார்?

A] தஞ்சை

B] மதுரை

C] காஞ்சி

D] கோவை

41) ஓவியர் இளம்கௌதமன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த பாண்டியன் மன்னன் காலத்தில் ஓவியராக பணியாற்றி இருந்தார்?

A] நெடுஞ்செழியன்

B] ஸ்ரீமாறன் ஸ்ரீவல்லபன்

C] அவனிப சேகர ஸ்ரீவல்லபன்

D] நெல்வேலி மாறன்

42) அவனிப சேகர ஸ்ரீவல்லபன் என்ற பாண்டிய மன்னன் கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டு காலத்தில் ஆட்சி புரிந்தவர்?

A] கி.பி.ஆறாம் நூற்றாண்டு

B] கி.பி.ஏழாம் நூற்றாண்டு

C] கி.பி.எட்டாம் நூற்றாண்டு

D] கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு

43) முதலாம் மகேந்திரவர்ம பல்லவ மன்னன் அவர்கள் கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது தமிழகத்தை ஆண்டார்?

A] கி.பி.எட்டாம் நூற்றாண்டு

B] கி.பி.ஏழாம் நூற்றாண்டு

C] கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு

D] கி.பி.பத்தாம் நூற்றாண்டு

44) புதுக்கோட்டை சித்தன்வாசல் குகைக்கோவிலில் கீழ்க்கண்டவற்றில் எது மட்டும் அங்கு காணப்படவில்லை?

A] நகரம், அரண்மனை ஓவியங்கள்

B] தாமரைத் தடாகம்

C] ஆடல் அணங்குகள்

D] அரசன், அரசி ஓவியங்கள்

45) சோழர்கால வனப்புமிக்க ஓவியங்களை கீழ்க்கண்ட எந்த கோவிலில் கண்டு மகிழலாம்?

A] கும்பகோணம் தாராசூரம்

B] தஞ்சை கங்கை கொண்ட சோழபுரம்

C] தஞ்சைப் பெரியகோவில்

D] சென்னை மாமல்லபுரம்

46) கீழ்க்கண்ட எந்த இடத்தில் மட்டும் விசயநகர மன்னர்களின் ஓவியங்கள் காணப்படுவதிலை?

A] திருவாரூர்

B] மதுரை

C] திருவரங்கம்

D] கோவை

47) கீழ்க்கண்டவற்றில் எந்த மன்னர்கள் காலத்தில் தஞ்சையில் ஓவியக்கலையானது நன்கு வளர்ச்சி பெற்றது?

A] மராட்டியர்கள்

B] பாண்டியர்கள்

C] சோழர்கள்

D] நாயக்கமன்னர்கள்

48) மராட்டிய மன்னர்கள் கீழ்க்கண்ட எந்த நூற்றாண்டின் தொடக்கத்தின் போது தஞ்சையை ஆண்டு வந்தனர்?

A] கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டு

B] கி.பி.பதினாறாம் நூற்றாண்டு

C] கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு

D] கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டு

49) மராட்டிய மன்னர்கள் காலத்தில் கீழ்க்கண்ட எவற்றில் ஓவியங்களானது தீட்டப்படவில்லை?

A] ஓலைகள்

B] மரப்பலகை

C] கண்ணாடிகள்

D] தந்தங்கள்

50) ஓவியங்களில் காணப்படும் வண்ணங்களின் வனப்புக்கேற்ப_____________பதிக்கப்பெற்றன?

A] தந்தங்கள்

B] கண்ணாடிகள்

C] மன்னரின் பெயர்கள்

D] இரத்தினங்கள்

51) கீழ்க்கண்ட எந்த இடத்தில் சுந்தரர் கயிலைசெல்லும் காட்சி, சிவபெருமான் முப்புரம் எரித்த காட்சி, சுந்தரரைத்

தடுத்தாளும் காட்சி, மாமன்னன் இராசராசன் ஆகிய ஓவியங்கள் காணப்படுகின்றன?

A] தஞ்சை பெரியகோவில்

B] சென்னை மகாபலிபுரம் கோவில்

C] மதுரை மீனாட்சி அம்மன் கோவில்

D] கும்பகோணம் தராசூரம் கோவில்

52) பொருத்துக:

1) ஆண் ஓவியர் - சித்திரசேனா; 2) பெண் ஓவியர் - சித்திராங்கதன்;

3) தட்சிணசித்திரம் - வண்ணங்கள் குழப்பும் பலகை; 4) வட்டிகைப்பலகை - மகேந்திரவர்மன்;

A] 1 3 2 4

B] 2 1 4 3

C] 3 4 1 2

D] 4 2 3 1

53) பொருந்தாத எண்ணம், செயல், சிந்தனை ஆகியவற்றால் ஏற்படும் மனநிலையே____எனப்படும்?

A] மனப்பிராந்தி

B] கோவம்

C] மன அழுத்தம்

D] மன அமைதியின்மை

54) மதுரையில் சொற்பொழிவாற்ற சென்றிருந்த பாண்டித்துரை அவர்கள் அங்கு கீழ்க்கண்ட எந்த இரு நூல்களை ஒருமுறாய் படித்துவிட்டு பேச எண்ணினார்?

A] மகாபாரதம், கம்பராமாயணம்

B] குறுந்தொகை, மணிமேகலை

C] புறநானூறு, சிலப்பதிகாரம்

D] திருக்குறள், கம்பராமாயணம்

55) பாண்டித்துரை அவர்கள் தமிழகத்தில் கீழ்க்கண்ட எந்த தமிழ்ச்சங்கத்தை தோற்றுவித்தார்?

A] நான்காம் தமிழ்ச்சங்கம்

B] மூன்றாம் தமிழ்ச்சங்கம்

C] ஐந்தாம் தமிழ்ச்சங்கம்

D] இரண்டாம் தமிழ்ச்சங்கம்

56) கீழ்க்கண்ட எந்த ஆண்டின் போது பாண்டித்துரை அவர்கள் தமிழகத்தில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினார்?

A] 1902

B] 1903

C] 1901

D] 1905

57) நான்காம் தமிழ்ச்சங்கமானது பாண்டித்துரை அவர்களால் தமிழகத்தில் எந்த மாவட்டத்தில் தோற்றுவிக்கப்பட்டது?

A] மதுரை

B] கோவை

C] தஞ்சை

D] சென்னை

58) சொற்பொழிவாளர் பாண்டித்துரை அவர்களால் மதுரையில் கீழ்க்கண்ட எந்த பள்ளியில் நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்கப்பட்டது?

A] மதுரை சேதுபதி மேல்நிலைப்பள்ளி

B] மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி

C] மதுரை அரசினர் உயர்நிலைப்பள்ளி

D] மதுரை அரசினர் நடுநிலைப்பள்ளி

59) 'தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை - என்ற வரியைப் பாடிய புலவர் யார்?

A] இராமலிங்கனார்

B] பாரதியார்

C] கவிமணி

D] பாரதிதாசன்

60) 'கல்லும் மலையும் குதித்து வந்தேன் - பெருங்காடும் செடியும் கடந்து வந்தேன்' - என்ற வரியை பாடிய கவிஞர் யார்?

A] பாரதிதாசன்

B] சுரதா

C] கவிமணி

D] முடியரசன்

61) கவிமணி எழுதிய கல்லும் மலையும் குதித்து வந்தேன் எனத் தொடங்கும் பாடலானது கீழ்க்கண்ட எந்த தலைப்பில் இடம்பெற்றுள்ளது?

A] ஆறு

B] மலை

C] இயற்கை

D] மலர்

62) கவிமணி அவர்கள் ஆறு என்னும் தலைப்பில் மொத்தம் எத்தனை கவிதைகளை எழுதியுள்ளார்?

A] 7 கவிதைகள்

B] 8 கவிதைகள்

C] 5 கவிதைகள்

D] 6 கவிதைகள்

63 பொருத்துக:

1) வந்தவர்களுக்கு ஊர்களை பரிசாக கொடுத்தவர் - ஆய்

2) இரவலர்க்கு குதிரையை பரிசாக கொடுத்தவர் - காரி

3) கூத்தர்களுக்கு தன் நாட்டையே பரிசாக கொடுத்தவர் - ஓரி

4) இல்லத்திற்கு பொருள்களை பரிசாக கொடுத்தவர் - நள்ளியக்கோடன்

A] 4 1 2 3

B] 3 4 1 2

C] 2 3 4 1

D] 1 2 3 4

64) பொருந்தா இணையைக் கூறுக:

1) பாரதிதாசன் - பிசிராந்தையார்;

2) மகேந்திரவர்மன் - தட்சிணசித்திரம்;

3) கழனியூரன் - தாத்தா பாட்டி சொன்ன கதைகள்;

4) திருத்தக்கதேவர் - குறிஞ்சித்திட்டு;

A] 2 பொருந்தாது

B] 3 பொருந்தாது

C] 4 பொருந்தாது

D] 1 பொருந்தாது

விடைகள் - ஓவியக்கலை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 14 | B | 27 | C | 40 | B | 53 | C |
| 2 | B | 15 | D | 28 | B | 41 | C | 54 | D |
| 3 | A | 16 | B | 29 | D | 42 | D | 55 | A |
| 4 | C | 17 | A | 30 | A | 43 | B | 56 | C |
| 5 | B | 18 | C | 31 | B | 44 | A | 57 | A |
| 6 | A | 19 | D | 32 | C | 45 | C | 58 | B |
| 7 | D | 20 | B | 33 | D | 46 | D | 59 | D |
| 8 | A | 21 | C | 34 | B | 47 | A | 60 | C |
| 9 | B | 22 | A | 35 | A | 48 | C | 61 | A |
| 10 | C | 23 | D | 36 | C | 49 | B | 62 | B |
| 11 | D | 24 | B | 37 | D | 50 | D | 63 | D |
| 12 | A | 25 | D | 38 | A | 51 | A | 64 | C |
| 13 | C | 26 | A | 39 | C | 52 | B | | |

18) கொடைக்குணம் - கொடைக்குணம் என்னும் சிறுகதையானது தாத்தா பாட்டி சொன்ன கதைகள் என்னும் நூலிருந்து எடுக்கப்பட்டது. இந்த நூலை எழுதியவர் - கழனியூரன்.

நன்றி - பழனி முருகன்